

# தூய ஆவியில் பயணம்

2011 சித்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியில் பயணம்

சித்திரை மாதம் 2011

"உமது விருப்பத்தைத் தவிர எனக்கு

வேறு எதுவும் இல்லை"

ISSN 1391 - 5975

வெளியிடுபவர்
சிறி ஒஸ்கா அபயரத்ன அடிகளார்
கிது தன புபுதுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபத்திற்கு கைகொடுத்தல்

வாழ்வு மரணம் எனும் இருவித நிகழ்வுகள் மனித வாழ்வின் யதார்த்தமாகும். இதனை அனைத்து உயிரினங்களும் எமக்கு வெளிப்படுத்துகின்றன. இந்நிகழ்வினை மாற்றி அமைக்க முடியாது. பிறப்பும் மரணமும் உறுதியாக நிகழும் ஒன்றாகும். நான் சில வேளைகளில் என் மரணத்தினைப்பற்றி மன ஒவியத்தில் தியானிப்பதுண்டு. ஆனால் எனது பிறப்பினைப்பற்றி நான் அவ்விதம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. பிறந்த தினங்களுக்கு விழாக் கொண்டாட்டங்கள் அதிகமிருப்பினும், மரணச் சடங்குகள் அவ்வாறு நடைபெறுவதில்லை.

நான் மரணச் சடங்குகள் பலவற்றில் பங்கு பற்றினாலும், அதனை சில வேளைகளில் மாத்திரமே தியானிப்பதுண்டு. ஒருவருக்குத் தமது நண்பரது, பகைவரது, அல்லது தமக்கு மிக நெருக்கமானவரது மரண ஞாபகம் அதிக காலம் நீடித்திருப்பதில்லை. அதன் தற்காலிக தன்மை மேலொங்குகின்றது.

தாய் திருச்சபையானவர், கார்த்திகை மாதத்தினை 'மரித்த விசுவாசிகளையும்' 'அனைத்து ஆத்மாகளையும்' நினைவு கூரும் மாதமாக ஒப்புக் கொடுக்கின்றார். அந்நாட்களில் அவர்களுக்காக திருப்பலியும், விசேச செபங்களும் ஒப்புக் கொடுக்கப்படுவதுடன் மரித்தவர்களை நினைவு கூர்ந்தலுக்கும் இடமளிக்கின்றார். மரணம் என்பது இறுதியாக அனைவருக்கும் உரிமையாகும் ஒன்றாகும்.

அருட்திரு ஒஸ்கா அபயரத்ன அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 01 வெள்ளி** **தவக்காலத்தின் 24 ஆம் நாள்**

ஓசே14:1-9 தி.பாடல்81.5-10,13,16 புனிதமாற்கு 12:28-34

## பரி.நற்செய்தியிலிருந்து

**அவர்கள் வாதாடிக் கொண்டிருப்பதைக் கேட்ட மறைநூல் அறிஞருள் ஒருவன் முன் வந்து, அவர் நன்றாக விடையளிப்பதைக் கண்டு "எல்லாவற்றிலும் முதல் கட்டளை எது? என்று கேட்டான். ....." அதற்கு அவர் நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே ஆண்டவர். ஆகவே உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத் தோடும், உன் முழு ஆன்மா வோடும், உன் முழு மனத்தோடும், உன் முழு வலிமையோடும் அன்பு செய்வாயாக. என்பது முதல் கட்டளை. உன் மீது நீ அன்பு காட்டுவது போல் உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக!" என்பது இரண்டாம் கட்டளை. இவற்றை விட பெரிய கட்டளை வேறில்லை என்றார்..... அவன் அறிவோடு விடையளித்ததைக் கண்ட இயேசு "நீ கடவுளின் அரசிற்கு தொலைவிலில்லை என்றார்.**

(நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)

## ஒளியில் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! ஒளியின் ஆழத்திற்கு என்னை அழைத்துச் செல்வீராக!

யோர்தான் நதித்திருமுழுக்குடன் வல்லமை பெற்ற கிறிஸ்து இயேசுவானவர், அறிஞர்களுடன் வாதாடுவதைக் கவனிக்-கின்றோம். கிறிஸ்து இயேசுவின் வார்த்தை களின் வல்லமையையும், அதிகாரத் தொனி யையும், உள் ஆழத்தையும் கண்டு வியந்த மறை நூல் அறிஞர் ஒருவர் கிறிஸ்து இயேசுவைப் பார்த்து கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கிறார் இயேசு. அவரது இரு கட்டளைகளையும் கேட்டுப் பூரிப்படைந்த மறை நூல் அறிஞர் அவ்விரு கட்டளை களையும் ஆமோதித்து தகனப்பலிகள் மற்ற எல்லாப் பலிகளையும் விட மேலானது இக்கட்டளைகள் என்கிறான். இந்தச் சம்பாவணையை அவதானிக்கும் போது இயேசு நாதரின் வார்த்தைக்கு அவதானத் தைச் செலுத்தினால், மறை நூல் அறிஞர் வினவிய போது கிறிஸ்து இயேசுவானவர், "இஸ்ராயேலே கேள்" என்று விழிக்கிறார். எனவே அப்பா தந்தையினால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ராயேலருக்காக அவர் விசேச அறிவித்தலை முன் வைக்கின்றார் என்பது புலனாகின்றது.

## எம் பேரில்

நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே அவருக்கு முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு மனத்தோடும், முழு வலிமையோடும், அன்பு செய்கின்றோமா? என்பது எமக்குள்ள கேள்விக் குரியதாகும். ஏனென்றால் நாம் வெளிப்படுத்தும் வார்த்தைகள் வார்த்தையில் மாத்திரம் தங்கி விடுகின்றன. வாழ்க்கையில் பிரதி-பலிக்கின்றதா? எனது எதிர்பார்ப்புத் தாகம் கடவுளையே பற்றியிருக்கும் ஒன்றாயின் எதற்கு நாம் அஞ்ச வேண்டும்? எனது அரண் என் ஆண்டவர் என்பது எக்கணத்திலும் என்னுள் எதிரொலிக்குமாயின் நான் யாருக்கு அஞ்ச வேண்டும். இதைத் தான் கிறிஸ்து இயேசு முதல் கட்டளையாக எமக்குத் தருகின்றார். அதைத் தவிர நீ உனக்கு எவ்வளவு அன்பு செய்கின்றாயோ அதே போல் உன் அயலாருக்கும் அன்பு செய்வது இரண்டாம் கட்டளை என்கின்றார். இதனை எம் வாழ்வில் ஏற்றுச் செயல்படுகின்றோமா? 'ஒவ்வொரு மனிதனும் என் நண்பன் ஒவ்வொரு மனிதனும் சகோதரன்' என்று நாம் வாயளவில் கூறினாலும், அதனை செயலளவில் செயல் படுத்துகிறோமா? நாம் மற்றவர்கள் நமக்கு அன்பு செய்வதை ஆசிக்கின்றோம். ஆனால் நாம் மற்றவர்களுக்கு அன்பு செய்வதற்கு முடியாத நிலையில் இருப்போமேயானால் கிறிஸ்து இயேசு நம்மைப் பார்த்துக் கூறுவார். ' நீ கடவுளின் அரசிற்கு வெகு தொலைவில் இருக்கின்றாய் ' என்பாரல்லவா?

## செபத்திற்குள்ளாகுதல்

'என் மக்களே எனக்கு செவி கொடுங்கள் . நான் உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றேன்.' (தி.பா. 81 8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 சித்திரை 02 சனி தவக்காலத்தின் 25ஆம் நாள்

| முதலாம் வெளிப்பாடு | பதிலுரைப்பாடல் | நற்செய்தி வெளிப்பாடு |
| --- | --- | --- |
| ஒசேயா 6:1-6 | தி.பா 51:1-2, 16-19 | புனித லூக் 18:9-14 |

இன்று நாம் தவக்காலத்தின் 25ஆம் நாளினை வந்தடைந்துள்ளோம். இன்றைய வெளிப்பாடுகள் இறைவன் தம்மிடம் திரும்புகின்றவர்களுக்கு வழங்கும் இரக்கத்தையும், கருணையையும் வெளிப்படுத்துகின்றன.

## முதலாம் வெளிப்பாடு

**"வாருங்கள் நாம் ஆண்டவரிடம் திரும்புவோம். நம்மைக்காயப படுத்தியவர் அவரே. அவரே நம்மைக் குணமாக்குவார். நம்மை அடித்து நொறுக்கியவர் அவரே. அவரே நம் காயங்களைக் கட்டுவார். இரண்டு நாளுக்குப் பின் புத்துயிர் அளிப்பார். மூன்றாம் நாளில் நம்மை எழுப்பி விடுவார். அப்பொழுது நாம் அவர் முன்னிலையில் வாழ்ந்திடுவோம். ........" உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல இரக்கத்தையே விரும்பு-கின்றேன். எரிபலிகளை விட கடவுளை அறியும் அறிவையே நான் விரும்புகின்றேன்.**

## ஒளியின் விழிப்புறுதல்

அன்பின் ஆவியானவரே! இரக்கத்தையும், கடவுளை அறியும் அறிவையும் எனக்கு வழங்கி கிறிஸ்து ஆண்டவரை நோக்கியவாறு பயணம் செய்ய உதவியருளும்.

இன்றைய முதலாம் வெளிப்-பாட்டை வாசிக்கையில், அன்று ஒசேயா இறைவாக்கினர் இரக்கத்தின் தேவனிடம் செல்ல மக்களை அழைத்தார். வழிதவறிச் செல்லுகையில் ஏற்படும் காயங்கள், வேதனைகள், அனைத்தையும் குணப் படுத்த வல்லவர் இறைவன் என்பதை அம்மக்களுக்கு வெளிப்படுத்தினார்.

இந்த இறைவாக்கு கிறிஸ்து ஆண்டவர் வழியாக முழுமை பெற்றது. அவர் பாடுகள், மரணம், அனைத்தையும் அனுபவிக்கையில், இயேசு ஆண்டவர் உலகைப் பார்த்து, உலகமே உனக்கு என் மேல் வல்லமை இல்லை. நான் காயப்படுத்தப்பட இடமளித்தவர் என் தந்தையே என்றும், என்னைக் குணப்-படுத்துபவர் அவரே என்றும், கேவலமான மரணத்திற்கு என்னை ஆளாக்கினாலும் மூன்றாம் நாளில், உயிர்த்தெழச் செய்து முடிவில்லாத மகிமைமிகு மாட்சிமையில் பங்கு பெறச் செய்பவர் பரம தந்தையே என்பதை வாழ்க்கை வழி வெளிப்படுத்தி, 'தந்தையின் விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை' என்பதற்கு சாட்சி பகர்கின்றார்.

## எம்மை நோக்குவோம்

இன்றைய நற்செய்தியில் பரிசேயன் ஆயக்காரன் செபத்தில் நாம் எதனைக் கண்டோம். 'பாவி என் மேல் இரக்கமாயிரும்' எனும் தாழ்மையான வேண்டுதலை ஆண்டவர் ஏற்றுக் கொண்ட விதமும், ஆணவம், அகங்காரம் நிறைந்த செபத்தின் பேரில் ஆண்டவர் பாராமுகமாய் இருப்பதையும் காணக் கிடைக்கின்றது அல்லவா? எம் செப வாழ்வு எத்தகையது? யாருக்காக நாம் வேண்டுகின்றோம்? 'வாருங்கள் நம் ஆண்டவரிடம் திரும்புவோம்'. மற்றவர்களுக்கு அழைப்புக் கொடுக்கின்றோமா? அன்றேல் நானுண்டு என் குடும்பமுண்டு என்று வாழ விரும்புகின்றோமா? ஆண்டவரின் உயிர்ப்பின் மகிமையில் பங்கு கொள்ள கிறிஸ்து இயேசு ஆண்டவரின் மனநிலை எம்மில் குடிகொள்ள இடமளிப்போம்.

## செபத்திற்கு உள்ளாகுவோம்.

எம் மீது கருணையும், பேரன்பும் காட்டும் அன்புத் தந்தையே! சிலுவைப் பாதை பயணத்தில் ஈடுபடுகின்றஅனைவரும் வருகின்ற துன்பங்கள் அனைத்தையும் மகிழ்வோடு ஏற்று வாழ்ந்து, உம்திருமகனின் உத்தானத்தின் மகிமையை தம் வாழ்வில் ஒவ்வொரு கணத்திலும் கண்டு மகிழ வரமருளும். ஆமென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 2011 சித்திரை 03 ஞாயிறு | | தவக்காலத்தின் 4ஆம் ஞாயிறு | |
| 1சாமு 16:1,6-7, 10-13 | தி.பா 23:1-6 | எபேசி 5:8-14 | பு.யோவான் 9:1-41 அல்லது 9:1,6-9, 13-17,34-38 |

எமது நாட்டில் நிலவிய பயங்கரவாத யுத்தம் முடிவடைந்து ஏறக்குறைய 2 வருடங்கள் முடிந்த போதிலும், அதன் விளைவு இன்னும் வழிந்தோடிய வண்ணமாக இருக்கின்றது. வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்த வண்ணம் இருக்கின்றது. அதன் சுமையை மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் துன்புறுகின்றார்கள். மக்களுக்குக் கொடுக்கப்பட்ட பல மானியங்கள் நிறுத்தப்பட்டு வருகின்றன. நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் மனிதனது நல்ல பண்பாடுகள் அழிந்த வண்ணமாக இருக்கின்றது. இருளரசனின் ஆதிக்கம் மேலொங்கிய வண்ணமாக இருக்கின்றது. அதன் காரணமாக மக்கள் ஒளியை விட்டு அகன்று இருளையே நாடுகின்றனர். ஆனபடியால் ஒளியானவரான இறை மகன் பேரில் கண்களை ஏறெடுப்போமாக! இருளால் மூடப்பட்ட எம்மை அவரது ஒளியினால் மூடிக்கொள்வதற்கு இடமளிப்போம். ஏனெனில் நாம் ஒளியில் வாழ்வதற்காகவே அழைக்கப்பட்டுள்ளோம்.

## முதலாம் வெளிப்பாட்டிலிருந்து

**ஆண்டவர் சாமுவேலை நோக்கி, "இஸ்ரயேலின் அரசராக சவுல் இல்லாதவாறு நான் அவனைப் புறக்கணித்ததை நீ அறிந்திருந்தும், நீ எவ்வளவு காலம் அவனுக்காகத் துக்கம் கொண்டாடுவாய்? உன்னிடமுள்ள கொம்பை எண்ணெயால் நிரப்பிக் கொண்டு போ. பெத்லகேமைச் சார்ந்த ஈசாயிடம் உன்னை அனுப்புகிறேன்: ஏனெனில் அவர் புதல்வருள் ஒருவனை அரசனாகத் தேர்ந்துள்ளேன் 'என்றார்..... மனிதர் பார்ப்பது போல் நான் பார்ப்பதில்லை. மனிதர் முகத்தைப் பார்க்கின்றனர்: ஆண்டவரோ அகத்தைப் பார்க்கின்றார் என்றார். .....ஆண்டவர் சாமுவேலிடம் தேர்ந்துக் கொள்ளப்பட்டவன் இவனே! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்! என்றார்.**

## ஒளியின் விழிப்புறுதல்

இறைவனுடைய திருத்திட்டம் வியப்பிற்குரியதும் மாறுபட்டதுமாகும். அது மனித நோக்கு மனித பார்வை என்பவற்றை மேம்பட்டுச் செல்வதாகும். அவர் எவரைத் தேர்ந்து கொள்கின்றாரோ அவரை அழைத்து ஆசீர்வதிக்கின்றார். அவர்களைக் கைவிடாது அவர்களுடனேயே இருக்கின்றார். புறத்தோற்றம், தகுதி, தகைமை, ஆற்றல் என்பவற்றை எதிர்பார்க்காத அவர், பிரமாணிக்கம் மிகுந்த இதயத்தை எதிர்பார்க்கின்றார். அவர்களது உள்ளரங்கத்தைத் தொட்டு ஸ்பரிசிக்கின்றார். இளைஞரான தாவீது பார்வையில் திடகாத்திரமானவரல்ல. ஆனால் அவர் இறைவன் முன்னிலையில் அரசிளங் குமார வீரன். இறைவனது ஆசீர் எவருக்குக் கிட்டுகின்றதோ, அது ஓர் குறிப்பிட்ட காலத்திற்கு மாத்திரமாகாது. வாழ்க்கை முழுவதிலும் சாட்சி பகர்வதற்காகக் கிடைக்கப் பெற்ற ஆசீராகும். அனுக்கிரகமுமாகும். அத்தகைய ஆசீரைப் பெற்ற பலர் இருந்த போதிலும், தமது வாழ்க்கையை இறை விருப்பத்திற்காக வேண்டி முழுமையாக அர்ப்பணமாக்கிய வீரர் இறைமகன் இயேசு ஆவார். அவர் பேரில் மாத்திரம் கண்களை ஏறெடுப்போம்.

## பரி.நற்செய்தியிலிருந்து

இயேசு சென்று கொண்டிருக்கும் போது பிறவிலேயே பார்வையற்ற ஒருவரைக் கண்டார். ..... "நான் உலகில் இருக்கும்வரை நானே உலகின் ஒளி" என்றார். இவ்வாறு கூறியபின் அவர் தரையில் உமிழ்ந்து, உமிழ்நீரால் சேறு உண்டாக்கி, அச்சேற்றைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையற்றவருடைய கண்களில் பூசி, நீர் சிலோவாம் குளத்துக்குப் போய்க் கண்களைக் கழுவும் என்றார். சிலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவர் என்பது பொருள். அவரும் போய்க் கழுவிப் பார்வை பெற்றுத் திரும்பி வந்தார். அக்கம் பக்கத்தாரும், அவர் பிச்சையெடுத்துக் கொண்டிருந்ததை முன்பு பார்த்திருந்தோரும், இங்கே அமர்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தவர் இவர் அல்லவா? என்று பேசிக்கொண்டனர். சிலர், அவரே என்றனர்: வேறு சிலர் அவரல்ல அவரைப் போல் இவரும் இருக்கிறார் என்றனர். ஆனால் பார்வை பெற்றவர், நான்தான் அவன் என்றார்......

(தயவு செய்து நற்செய்தி வெளிப் பாட்டை முழுமையாக வாசிக்கவும்.)

## ஒளியின் விழிப்புறுதல்

இறை மகனாம் இயேசுவினுடைய உள்ளரங்கம் எத்துணை விழிப்புடையது? அனாதரவானவர்கள் பேரில் அவரது இரக்கம் மிகுந்த இதயம் எத்துணை அண்மையிலுள்ளது என்பது அவர் வார்த்தைகளின் வழி தெளிவாகின்றது. " நான் உலகில் இருக்கும் வரை நானே உலகின் ஒளி" எவருக்கேனும் அவரிடம் வருவதற்கான இடமுண்டு. அவரிடம் வருவோர் அனைவருக்கும் விடுதலை, மகிழ்ச்சி, குணம் என்பவற்றை அளிக்கும் அவரது உள்ளரங்க அனுபவம், இறையன்பினால் நிரம்பி வழிந்தோடிய வண்ணம் இருக்கின்றது. புறத்தோற்றத்தைப் பார்த்து "அருவருப்பிற்குரியது" என்று கருதப்பட்டவைகளுக்கு அவர் மதிப்பும் கௌரவமும் கொடுக்கின்றார். பார்வையற்றவரைக் குணப்படுத்துவதற்காக வேண்டி அவர் எடுத்த சேறு தெய்வீக மருந்தாகின்றது. நீதி நியமங்களுக்கு மாத்திரம் கட்டுப்படாத அவர், சுதந்திர மிகு மகனாக அன்பினால் அவர் பிரதிச் செயல் காண்பிக்கின்றார். அனைத்தையும் ஊடுருவிக் காண்கின்ற அவரது வார்த்தைகள் பிறவிக் குருடனை பார்வையடைய செய்யுமளவிளான பெறுமளவிலான வல்லமை யுடையதாகின்றது. இருளிலேயே மூடப்பட்டிருந்த முழு வாழ்க்கையும் ஒளி மயமாகியது. அவனில் இருந்த விசுவாசம் அவனைக் குணமாக்கிற்று.

## எம் பேரில்

*"என் பின்னே வா" என்ற ஆண்டவரது அழைப்பிற்கான எனது பிரதிச் செயல் .......

*வழிபாடுகளுக்கு,நீதி நியமங்களுக்கு மாத்திரம் கட்டுப்பட்டவனா? ........

*எனது விருப்புக்கள் எண்ணங்கள் கருத்துக்கள் நோக்குகள் உலக இருளினாலா நிரம்பியிருக்கின்றன?

## இரண்டாவதுவெளிப்பாட்டிலிருந்து

ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள். ஆகவே ஒளி பெற்ற மக்களாக வாழுங்கள். ஏனெனில், ஒளியே எல்லா நன்மையையும் நீதியையும் உண்மை யையும் விளைவிக்கிறது. ஆண்டவருக்கு உகந்தது எது என்பதை ஆராய்ந்து பாருங்கள். .....

## ஒளியின் விழிப்புறுதல்

ஒளிமிக்க வாழ்வு வாழ வேண்டுமென்கின்ற ஆவல் இருந்த போதிலும், சங்கமமாக வாழும் போது ஏற்படுகின்ற பிரச்சனைகள் காரணமாக இருளுக்கே இழுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் பல உள. முகங் கொடுக்கின்ற நிகழ்வுகள் பல காரணமாக பலரைப்பற்றிய இருளான தவறான எண்ணங்களே ஏற்படுகின்றன. எனது ' அதி உந்துதலே ' மற்றவர்களை விமர்சிப்பதற்கான காரணமாக அமைகின்றது என்பதை , எனது மணித்தியாலத்தின் போது ஆவியானவர் காண்பித்தார். மனம் வருந்தினேன். ஆண்டவர் தம் திருக்குருதியினால் என்னை புனிதப்படுத்தினார். இருளில் இருந்த நான் ஒளிக்குக் கொண்டு வரப்பட்டேன். ' ஒளியே எல்லா நன்மையையும், நீதியையும் உண்மையையும் விளைவிக்கின்றது. என்ற வார்த்தை எனக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியது.

## நாள் பூராகவும்

"தூங்குகிறவனே விழித்தெழு. இறந்தவனே உயிர்பெற்றெழு கிறிஸ்து உன் மீது ஒளிர்ந்தெழுவார். "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 04 திங்கள் த.காலத்தின் 27ஆம் நாள்**
**எசாயா 65:17-21 தி.பா.30:1,3-5, 10-12 யோவான் 4:43-54**

## பரி.நற்செய்தியிலிருந்து

அந்த இரண்டு நாளுக்கு பிறகு இயேசு அங்கிருந்து கலிலேயாவுக்குச் சென்றார். தம் சொந்த ஊரில் இறைவாக்கினருக்கு மதிப்பு இராது என்று அவரே கூறியிருந்தார். அவர் கலிலேயா வந்த போது கலிலேயர் அவரை வரவேற்றனர். ஏனெனில் அவர்கள் திருவிழாவுக்குச் சென்றிருந்த போது எருசலேமில் அவர் செய்தவை அனைத்தையும் கண்டிருந்தனர். .......அவர் போய்க் கொண்டிருக்கும் போதே அவருடைய பணியாளர்கள் அவருக்கு எதிர் கொண்டு வந்து மகன் பிழைத்துக் கொண்டான் என்று கூறினார்கள். 'எத்தனை மணிக்கு நோய் நீங்கியது?' என்று அவர் அவர்களிடம் வினவ, அவர்கள், நேற்றுப் பிற்பகல் ஒருமணிக்கு காய்ச்சல் நீங்கியது' என்றார்கள். 'உம் மகன் பிழைத்துக் கொள்வான்' என்று இயேசு அந்நேரத்தில்தான் கூறினார் என்பதை அவன் தந்தை நினைவுகூர்ந்தார். அவரும் அவர் வீட்டார் அனைவரும் இயேசுவை நம்பினர். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தபிறகு செய்த இரண்டாவது அரும் அடையாளம் இதுவே.

## ஒளியின் விழிப்புறுதல்

இயேசு கிறிஸ்து ஆண்டவரின் திருப்பாடுகளைத் தியானிப்பதற்கு உதவி செய்கின்ற தூய ஆவியானவரே, அப்பாவின் விருப்பத்தினை நிறைவேற்றி இறைமகனின் உள்ளத்தினை இந்நற்செய்தியின் ஊடாகக் காண்பதற்கு என்னை வழி நடத்தியருளும். தந்தையின் விருப்பத்தினை நிறைவேற்றுவதில் தீராத ஆசை கொண்ட இயேசு கிறிஸ்து நாதர் இரண்டு நாள் சமாரியர்களுடன் தங்கின பிறகு இறை பணி செய்ய புறப்படு கின்றார். தம் சொந்த ஊரில் வாழ்ந்த போது அங்குள்ள மக்களின் உள்ளங்களை நன்கு புரிந்து வைத்திருந்தார். எனவே தான் "தம் சொந்த ஊரில் இறைவாக்கினருக்கு மதிப்பு இராது" என்று கூறுகின்றார். அவர் கலிலேயாவில் முதல் புதுமையைச் செய்து அப்பாவை மகிமைப் படுத்துகின்றார். இந்தப் புதுமை அப்பாவின் அரசுக்கு ஆழமான அத்திவாரமாக்கப்பட்டது. "அடையாளங்களையும் அருஞ்செயல்களையும் கண்டால் அன்றி நீங்கள் நம்பவே மாட்டீர்கள்" என்று இயேசு கிறிஸ்து கூறினாலும் மக்கள் மீது முழுமையாக அன்பு கொண்ட அவர் நோய்களைக் குணமாக்கி, மக்களை விடுதலை செய்து மக்களுக்காகவே வாழ்கின்றார்.

## எம் பேரில்

அன்று இயேசுகிறிஸ்து ஆண்டவர் மக்களின் அபிலாஷைகளை புரிந்து கொண்டு வாழ்ந்தார். செயற்பட்டார். இன்று கிறிஸ்தவ மறுமலர்ச்சி மக்களாகிய நாம் மக்களைப் புரிந்து கொள்கின்றோமா? அவர்களின் விருப்பங்களை நிறைவேற்கின்றோமா? "நீ உலகத்தில் வாழ்ந்தாலும் உலகத்துக்குச் சொந்தமில்லை எனக்குத் தான் சொந்தம்" என்று கூறும் ஆண்டவருக்கு நாம் அளிக்கும் பதில் என்ன? சிந்திப்போம், பரிசுத்த ஆவியின் துணையோடு செயல்பட்டு சீடத்துவ சங்கத்தைக் கட்டி எழுப்புவோம்.

## செபம்

இரக்கத்தின் ஊற்றாகிய ஆண்டவரே! அன்று அரச அலுவலர் தம் மகனுக்காக வேண்டிய வேண்டுதலுக்கு கனிவோடு செவி சாய்த்தவரே! அவருக்கு தேவையான விசுவாசத்தின் ஒளியை வழங்கியவரே! என் கடவுளாகிய ஆண்டவரே உம்மிடம் உதவி வேண்டினேன். என் விசுவாசத்தை அதிகப்படுத்தி, என்னைக் குணப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011சித்திரை 05 செவ்வாய் த.காலத்தின் 28ஆம் நாள்**

**எசேக். 47:1-9,12 தி.பா. 46:1-2, 4-5,7-8 பு.யோவான். 5:1-3, 5-16**

## பரி நற்செய்தியிலிருந்து

**..... இம் மண் டபங் களில் உடல் நலமற்றோர் ....முடக்குவாதமுற்றோர் ஆகியோர் திரளாய் படுத்துக் கிடப்பர். (இவர்கள் குளத்து நீர் கலங்குவதற்காகக் காத்திருப்பார்கள். ...) முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல் நலமற்றிருந்த ஒருவரும் அங்கு இருந்தார். இயேசு அவரைக் கண்டு, நெடுங்காலமாக அவர் அந்நிலையில் இருந்துள்ளதை அறிந்து, 'நலம் பெற விரும்புகிறீரா?' என்று அவரிடம் கேட்டார். 'ஐயா, தண்ணீர் கலங்கும் போது என்னைக் குளத்தில் இறக்கிவிட ஆள் இல்லை. நான் போவதற்கு முன் வேறு ஒருவர் இறங்கிவிடுகிறார்' என்று உடல் நலமற்றவர் அவரிடம் கூறினார். இயேசு அவரிடம், 'எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும்' என்றார். உடனே அம்மனிதர் நலமடைந்து தம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்தார். நீர் நலமடைந்துள்ளீர்: இதை விடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க இனிப் பாவம் செய்யாதீர்' என்றார். .....**

## ஒளியின் விழிப்புறுதல்

இறை அப்பாவின் திருவிருப்பத்தினை நிறை-வேற்றுவதற்காகவே இவ்வுலகிற்கு வந்த இறைமகன் இன்றைய நற்செய்தியின் மூலம் முப்பதெட்டு ஆண்டுகளாக உடல் நலமற்றிருந்த ஒருவருடன் சங்கமமாகின்றார். நிரந்தரமாக தூய ஆவியானவரின் வழிநடத்தலுக்கு உள்ளாகி இருந்த இறைமகன் அப்பா தந்தையின் திருமுன் தோன்றி நின்றவாறு அப்பா தந்தையின் அரவணைப்பிற்குள்ளாகி அப்பாவின் அன்பினை முழுமையாக அனுபவித்தவாறு, உடல் நலமற்றவருக்கு அப்பா தந்தை காட்டும் அன்பினைக் காண்பிப்பதுடன் அவரைப் பார்த்து 'நலம் பெற விரும்புகிறீரா? உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு செல்லும்' என்று அவரைக் குணப்படுத்துவதுடன் இறை அப்பாவின் திருச்சித்தம் நிறைவேறியதைக் கண்டு பூரிப்படைகின்றார். ஓய்வுநாளில் புதுமைகள் செய்த அவரைப் பார்த்து, யூதர்கள் ஓய்வு நாளில் சட்டத்திற்கு எதிராக செயற்படுகிறீரே எனக் குற்றம் சாட்டும் அவர்களின் மன நிலையைக் கண்டு வேதனைப்படுவதுடன் இறை அப்பாவின் திரு விருப்பத்தினை நிறைவேற்றும் போது, அவர் முகம் கொடுத்த கஷ்டங்களுக்கும் சவால்களுக்கும் சந்தோசத்துடன் முகம் கொடுக்க முன் வந்தார். 'உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை' எனக் கூறுவதற்கு தூய ஆவியானவர் அவரை வழிநடத்தினார். நலமாக்கியவரைப் பார்த்து நீர் நலமடைந்துள்ளீர் இதைவிட கேடான எதுவும் நிகழாதிருக்க இனிப் பாவம் செய்யாதீர் என எச்சரிக்கின்றார்.

## எமது பேரில்

இறை அரசின் மக்களாக தேர்ந்து எடுக்கப்பட்ட நாம் உண்மையான கிறிஸ்தவர்களாகவா வாழ்கின்றோம்? இதைவிடக்கேடான எதுவும் நிகழாதிருக்க இனிப்பாவம் செய்யாதீர் எனக் கூறும் ஆண்டவரின் ஒலிக்கு விழிப்புறுவோம். இன்று எம்மையும் பார்த்து நலம் பெற விரும்புகிறீரா? என கூறும் வார்த்தையின் முன்னால் நின்று எமது நிலையைத் திரும்பிப் பார்ப்போம். மற்றவர்களின் பெலவீனங்களுக்கு அன்பு செய்யாமல் பொறாமை வைராக்கியம் பழிவாங்கல் போன்றவற்கு உள்ளாகி சிந்தனை சொல் செயல்களால் எவ்வளவு பாவம் செய்கின்றோம். எமது பெலவீனங்களுக்கு விழிப்புற்று இத்தவக் காலத்தில் மனந்திருந்தி மனம் மாறி புதிய படைப்பாக மாறுவதற்கு தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம். எம்மை வழி நடத்த தூய ஆவியானவருக்கு இடமளிப்போம்.

## செபத்திற்குள்ளாகுதல்

அன்பின் ஆண்டவரே, இத்தவக்காலத்தில் எமது பாவங்களுக்கு விழிப்புற்று மனந்திருந்தி உமது மகனாக/மகளாக வாழ உமது பரிசுத்த ஆவியினால் எம்மை அபிஷேகம் செய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 06 புதன் த.காலத்தின் 29ஆம் நாள்**

**எசாயா 49:8-15 தி.பா. 145:8-9, 13-14,17-18 பு.யோவான் 5:17-30**

## பரி. நற்செய்தி நிகழ்ச்சி

இயேசு அவர்களிடம், 'என் தந்தை இன்றும் செயலாற்றுகிறார் நானும் செயலாற்று கிறேன்' என்றார். இவ்வாறு அவர் ஓய்வு நாள் சட்டத்தை மீறியதோடு நில்லாமல், கடவுளைத் தம் சொந்தத் தந்தை என்று கூறித் தம்மையே கடவுளுக்கு இணையாக்கியதால் யூதர்கள் அவரைக் கொல்ல இன்னும் மிகுந்த முயற்சி செய்தார்கள். இயேசு அவர்களைப் பார்த்துக் கூறியது: 'மகன் தாமாக எதையும் செய்ய இயலாது: தந்தையிடம் தாம் காணும் செயல்களையே செய்ய இயலும். தந்தை செய்பவற்றை மகனும் அவ்வாறே செய்கிறார் என நான் உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தந்தை மகன் மேல் அன்பு கொண்டு தாம் செய்யும் அனைத்தையும் அவருக்குக் காட்டுகிறார்: இவற்றைவிடப் பெரிய செயல்களையும் அவருக்குக் காட்டுவார். நீங்களும் வியப்புறுவீர்கள். தந்தை இறந்தோரை எழுப்பி அவர்களை வாழ வைப்பது போல மகனும் தாம் விரும்பியவர்களை வாழ வைக்கிறார்.

## ஒளியின் விழிப்புறுதல்

தூய ஆவியானவரே! உமது ஞானத்தினால் என்னை நிரப்பி இன்றைய நற்செய்தி வார்த்தைகளின் தெளிவினைத் தந்தருளும். தந்தையின் சிந்தனை சொல் செயலை நிறைவேற்றிக் காட்டுபவரே இறைமகன் இயேசு கிறிஸ்து. அதற்கு உறுதுணையாக இருந்து செயல்பட உதவுபவரே தூய ஆவியார் தந்தை மகன் தூய ஆவி எனும் மூவரும் இணைந்து செயல்படும் நிகழ்வுகளே உலக நிகழ்வுகள். இன்றைய நற்செய்தி வழியாக இயேசு கிறிஸ்து தனது செயற்பாட்டினை மக்களுக்கு அறிவிக்கிறார். தந்தை எவ்வாறு தன் வழியாகச் செயல்படுகின்றாரோ அவ்வாறே தாம் செயல் புரிவதாக மக்களுக்கு அறிவிக்கிறார். தந்தை தனக்கு அளித்திருக்கும் அதிகாரத்தின் படியே செயல்படுவதாகக் கூறும் அவர் தந்தை வாழ்வின் ஊற்றாக இருப்பது போல் தன்னையும் வாழ்வின் ஊற்றாக இருக்குமாறு செய்துள்ளதை யும் குறிப்பிடுகிறார். மேலும் தீர்ப்பு நாளில் நடைபெறும் நிகழ்வைப் பற்றியும் இங்கு விபரித்துள்ளார்.

## எமது பக்கம்

இறைமகனின் இந்த உயிருள்ள வார்த்தைகளை நாம் எந்தளவிற்கு விசுவசிக்கிறோம். இவ்வுலகில் நாம் வாழும் பொழுதே மறு உலக வாழ்விற்காக எம்மைத் தயார் படுத்த வேண்டும் என்பதில் எவ்வளவு தூரம் அக்கறை உள்ளவர்களாக இருக்கிறோம். "காலம் வருகிறது அப்போது கல்லறைகளில் உள்ளோர் அனைவரும் அவரது குரலைக் கேட்டு வெளியே வருவர். நல்லன செய்தோர் தண்டனைத் தீர்ப்பு பெற உயிர்த்தெழுவர் தீயன செய்வோர் தண்டனைத் தீர்ப்பு பெற உயிர்த்தெழுவர் எனும் வார்த்தைகள் எமது உள்ளத்தை ஊடுருவுகிறதா? அப்படியாயின் வாழ்வு பெற உயிர்த்தெழ வேண்டும் என்ற குறிக்கோளும் தாகமும் எம்முள் ஊற்றெடுக்கிறதா? எம்மையே நாம் சோதித்துப் பார்ப்போம் இந்த தவக்காலத்தை உரிய முறையில் அனுசரிப்பதோடு இறுதி வரை இறைவனுக்குகந்த வாழ்வு வாழும் வல்லமையைக் கேட்டு செபிப்போம்.

### செபம்

எல்லாம் வல்ல இறைவா! உமது அன்பு மகனைப் போன்று உமது திருவுளத்தை நிறைவேற்றி வாழ்ந்து தீர்ப்பு நாளில் நிலைவாழ்வுக்காக உயிர்தெழும் வரத்தினை எமக்குத் தந்தருளும்.

தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 07 வியாழன் த.காலத்தின் 30ஆம் நாள்**

| வி.பயணம். | தி.பாடல் | பு.யோவான் |
|---|---|---|
| 32:7-14 | 106:19-23 | 5:31-47 |

### பரி. நற்செய்தி நிகழ்ச்சி

**..... 'என்னைப்பற்றி நானே சான்று பகர்ந்தால், என் சான்று செல்லாது. என்னைப் பற்றி சான்று பகர வேறு ஒருவர் இருக்கிறார். என்னைப்பற்றி அவர் கூறும் சான்று செல்லும் என எனக்குத் தெரியும். யோவானிடம் ஆளனுப்பி நீங்கள் கேட்ட போது அவரும் உண்மைக்குச் சான்று பகர்ந்தார். மனிதர் தரும் சான்று எனக்குத் தேவை என்பதற்காக அல்ல: நீங்கள் மீட்புப் பெறுவதற்காகவே இதைச் சொல்கிறேன். யோவான் எரிந்து சுடர் விடும் விளக்கு. நீங்கள் சிறிது நேரமே அவரது ஒளியில் களிகூர விரும்பினீர்கள். 'யோவான் பகர்ந்த சான்றை விட மேலான சான்று எனக்கு உண்டு. நான் செய்து முடிக்குமாறு தந்தை என்னிடம் ஒப்படைத்துள்ள செயல்களே அச்சான்று. நான் செய்துவரும் அச்செயல்களே தந்தை என்னை அனுப்பியுள்ளார் என்பதற்கான சான்றாகும். 'என்னை அனுப்பிய தந்தையும் எனக்குச் சான்று பகர்ந்துள்ளார். நீங்கள் ஒருபோதும் அவரது குரலைக் கேட்டதுமில்லை: அவரது உருவைக் கண்டதுமில்லை......**

### ஒளியின் விழிப்புறுதல்

உண்மையின் ஆவியானவரே! இயேசு ஆண்டவரின் உள்ளத்தைக் கண்டு கொள்ள ஞான ஒளியைத் தாரும்.

இன்றைய நற்செய்தியில், உண்மைக்குச் சான்று பகர்வதற்காக தந்தையால் அனுப்பப்பட்ட இறை மகனாகிய இயேசு நாதர், தம்மை ஏற்றுக் கொள்ளத் தயங்கிய யூதர்களுக்கு தம்மை வெளிப்படுத்துகின்றார். யூதர்கள் உண்மையான இறைவன் யார் என்பதையும், அவர் அனுப்பிய மீட்பர் யார் என்பதையும், இறைவாக்கினர், திருமுழுக்கு யோவான் வழியாக அறிந்தாலும், அவரைப் புறக்கணித்து, தாம் உண்மையை அறிந்தவர்கள் எனும் பெயரை நிலைநாட்டி, சதித்திட்டம் தீட்டுகின்றனர். இதனை இறை மகனானவர் அறிந்து கொள்ளுகின்றார்.

எவ்வேளையிலும் தந்தையை மகிமைப் படுத்துவதையே தம் குறிக்கோளாகக் கொண்ட மகனானவர், எவரது புறக்கணிப்புக்களையும், பொருட்படுத்தாமல் தந்தை தம்மிடம் எதிர் பார்க்கும் குணப்படுத்துதல், பிறருக்கு உதவிசெய்தல் எளியோரை ஏற்றுக்கொள்ளுதல் அவர்களை மீட்டுக் கொள்வதற்காக தம் உயிரைத் தியாகம் செய்தல் போன்ற செயல்களைச் செவ்வனவே நிறைவேற்றுகின்றார். மற்றவர்கள் என் செயலைப் பற்றி என்ன நினைப்பார்கள். அவர்களிடம் இருந்து நான் தப்பித்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பது அவருக்குப் பிரச்சினையாய் இருக்கவில்லை. யோவான் தம்மைப் பற்றி பகர்ந்த சான்றை விட மேலான சான்று தான் இறைவன் எனக்குச் செய்து முடிக்குமாறு தந்த செயல்கள் என்பதற்கு ஒவ்வொரு கணமும் விழிப்புற்றார்.

### எம் பேரில்

மனிதர் அளிக்கும் பெருமையின் முன்னிலையில் மதிமயங்கியவர்களாக, இறைவன் எம்மிடம் எதிர்பார்த்தவற்றைப் புறக்கணித்து, எம் மனம் போன போக்கின்படி யூதர்களைப் போல் நாம் வாழ்ந்திருந்தால் மனம் வருந்தி எம் வாழ்வை மாற்றிக் கொள்வோம்.

### செபத்திற்குள்ளாகுதல்

***அன்பின் தந்தையே! உமது குரலைக் கேட்டதுமில்லை. உமது உருவைக் கண்டதுமில்லை. இயேசு ஆண்டவருள் உமது குரலைக் கேட்கவும், உமது உருவைக் காணவும் நீர் எம்மிடம் எதிர்பார்ப்பனவற்றை திருமகனானவர் நிறைவேற்றியதைப் போன்று ஒன்றையுமே தவறாது நிறைவேற்றவும் உமது ஆவியின் வல்லமையால் எம்மை வல்லமைப்படுத்தியருளும் ஆமென்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 08 வெள்ளி த.காலத்தின் 31ஆம் நாள்**
**சா.ஞானம் 2:1,12-22 தி.பா 34:16-20,22 யோவான் 7:1-2, 10,25-30**

### பரி. நற்செய்தியிலிருந்து

**இயேசு கலிலேயாவில் நடமாடி வந்தார் யூதர்கள் அவரைக் கொல்ல வழி தேடிக் கொண்டிருந்ததால், அவர் யூதேயாவில் நடமாட விரும்பவில்லை. யூதர்களின் கூடாரத் திருவிழா அண்மையில் நிகழவிருந்தது. .... எருசலேம் நகரத்தவர் சிலர், 'இவரைத் தானே கொல்லத் தேடுகிறார்கள்? இதோ! இங்கே இவர் வெளிப்படையாய்ப் பேசிக் கொண்டிருக்கிறாரே! யாரும் இவரிடம் எதுவும் சொல்லவில்லையே! .... ஆனால் மெசியா எங்கிருந்து வருவார் என்பது யாருக்கும் தெரியாமல் அல்லவா இருக்கும்! இவர் எங்கிருந்து வருகிறார் என்பது நமக்குத் தெரியுமே' என்று பேசிக் கொண்டனர். ஆகவே கோவிலில் கற்பித்துக் கொண்டிருந்த போது இயேசு உரத்த குரலில், 'நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன் என்பவை உங்களுக்குத் தெரியும். ஆயினும் நானாக வரவில்லை. என்னை அனுப்பியவர் உண்மையானவர். அவரை உங்களுக்குத் தெரியாது. எனக்கு அவரைத் தெரியும். .......**

### ஒளியின் விழிப்புறுதல்

வாரும் தூய ஆவியானவரே! எம் ஒவ்வொருவரது உள்ளத்தையும் தொட்டருளும். உமது வார்த்தையை விளங்கிக் கொள்ள இறை ஞானத்தை தாரும்.

இயேசு இந்த உலகிற்கு வந்ததன் நோக்கமே பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காகும், தாம் புறக்கணிக்கப்பட்டு, பாடுகள் பல அனுபவித்து, சிலுவையில் அறைந்து கொல்லப்படுவார். என்பதை அவர் அறிக்கை யிட்டிருந்தார். இருப்பினும் நற்செய்தியில் யூதர்களின் சூழ்ச்சிக்கு அகப்படாமல் மறைவாக ஒளிந்து நடமாடுகின்றார் என்று குறிப்பிடப்படு கின்றது. தந்தையின் திருத்திட்டத்தை அறிந்தவர் ஒளிவது ஏன்? என்ற கேள்வி எமக்குள் எழலாம். அதற்கான பதில் தந்தையின் நேரம் இதுவல்ல என்பதாகும். அந் நேரம் வரையும் அவரை முன்கொண்டு வெளிப்படுத்தப்பட்ட இறைவாக்குகள் பூரணம் அடையும் வரையும் அவர் காத்திருந்தாரல்லவா?

### எம் பேரில்

*அண்மையில் வெத்தித் தாளில் தந்தையும் வயது மகனும் பஸ்ஸில் மோதி அதே இடத்தில் பலி. என்றும் மன்னாரில் இருந்து வந்த பஸ்ஸின் வேகத்தால் சுமார் ஆறு பேர் பலி. பலர் கவலைக்கு இடமான நிலையில் படு காயம். இவைதான் இக்காலத்தில் அவசரப் புத்தியினால் நிகழும் நிகழ்வுகளாகும்.*

*அன்றும் யூதர்கள் அறியாமையின் அவசரப் புத்தி அவரை விரைவில் கொல்ல வேண்டும் என்று எண்ணி வழிதேடினார்கள். அவரது உண்மையான செயல்பாடு இவர்களுக்குப் பிழையாகவிருந்தது. அவர்கள் சட்டத்தை மட்டும் கடைப்பிடிக்கின்றனர். அன்பை மறந்து விடுகின்றனர். இயேசுவோ சட்டத்தை விட அன்புக்கு மதிப்பினைக் கௌரவத்தை அளிப்பதனால், யூத மக்கள் அவர் பேரில் இடறல்படுகின்றார்கள்.*

*இயேசு ஆண்டவரை அறிந்த நாம் அவரிடம் உதவி கேட்போம். எமது பெலயீனங்களில் உமது பெலன் விளங்க வரம் தாரும். தந்தையின் திருவுளத்திற்காகக் காத்திருக்க அவருடன் ஐக்கியமாகுவோம். தவக்கால தியானங்களில் ஆழமாக பங்கு பற்றுவோம்.*

### திருப்பாடலிலிருந்து

உடைந்த உள்ளத்தவர்களுக்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார். நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார். நேர்மையாளருக்கு நேரிடும் தீங்குகள் பல. அவை அனைத்தினின்றும் ஆண்டவர் அவர்களை விடுவிக்கின்றார். (தி.பா 34:18-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 09 சனி த.காலத்தின் 32ஆம் நாள்**
**எரேமியா 11:18-20 தி.பா 7:1-2,8-11 யோவான் 7:40-53**

## பரி. நற்செய்தியிலிருந்து

**கூட்டத்தில் சிலர் இவ்வார்த்தைகளைக் கேட்டு, 'வரவேண்டிய இறைவாக்கினர் உண்மையில் இவரே' என்றனர்.வேறு சிலர், 'மெசியா இவரே' என்றனர். மற்றும் சிலர், 'கலிலேயாவிலிருந்தா மெசியா வருவார்? தாவீதின் மரபிலிருந்தும் அவர் குடியிருந்த பெத்லகேம் ஊரிலிருந்தும் மெசியா வருவார் என்றல்லவா மறைநூல் கூறுகிறது?' என்றனர். இப்படி அவரைக் குறித்து மக்களிடையே பிளவு ஏற்பட்டது. சிலர் அவரைப் பிடிக்க விரும்பினர். ஆனால் யாரும் அவரைத் தொடவில்லை. தலைமைக் குருக்களும் பரிசேயர்களும் அனுப்பியிருந்த காவலர்கள் அவர்களிடம் திரும்பி வந்தார். அவர்கள் காவலர்களிடம், 'ஏன் அவனைப் பிடித்துக்கொண்டு வரவில்லை?' என்று கேட்டார்கள். காவலர் மறுமொழியாக, 'அவரைப் போல எவரும் என்று பேசியதில்லை' என்றனர். பரிசேயர் அவர்களைப் பார்த்து, 'நீங்களும் ஏமாந்து போனீர்களோ?**

## ஒளியின் விழிப்புறுதல்

கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அவர் இறைமகன் என அவருடன் சேர்ந்திருந்த சீடர்கள் கூட உறுதியாக விசுவசிக்கவில்லை. அற்புதங்களை கண்டு வியந்தாலும் அவரது உள்ளார்ந்த நோக்கத்தை புரிந்து கொள்ள முடியாதிருந்தது. இதனாலே சிலுவையை சுமக்கும் போது அவரோடு நில்லாது விலகி நின்றார்கள். ஆனால் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட பின் மரணத்தை கூட துணிவோடு ஏற்றுக் கொண்டார்கள். அப்படியிருக்க உலகத்தார் அவர் வாழ்ந்த காலத்தில், குருடன் யானையின் உருவத்தை வெளிப்படுத்துவது போல், அவரை பலவித கோணங்களில் கண்டு விமர்சித்தார்கள். கிறிஸ்து நாதர் யாருடைய விமர்சனத்தைக் கேட்டும் சலனமடையவில்லை. அதற்கான காரணமே, அவர் உலகத்தை நோக்கவில்லை தந்தையை மட்டுமே நோக்கினார். 'உமது விருப்பத்தை தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை' என்று சொல்லில் மட்டும் கூறாமல் செயலிலும் காட்டினார்.

## எம் பேரில்

குறுக்கு வழியில் பணத்தை தேடும் கும்பல்கள் மத்தியிலே என் வீடு அமைந்துள்ளது. பாவத்தை வெறுத்தாலும் பாவிகளை கிறிஸ்து அன்பு செய்தார் என்பதற்கேற்ப அவர்களுடன் நட்புறவு கொண்டாலும், அவர்கள் என்மீது பொறாமையும் பயமும் கொண்டு செயல்படுவதை என்னால் இனம் காண முடிந்தது. என்னை மீட்ட இறைவனே என் அயலவர்களையும் மீட்டருளும் என்று செபிப்பதுண்டு. 2008 என் கணவரின் உறவினரான மகனொருவர் படிப்பிற்காக என் வீட்டில் தங்கியிருந்தார். என் வீட்டில் "புலி படையில் உள்ளவரை தங்க வைத்திருப்பதாக பொலிசாருக்கு புகார் செய்ததால், அவரை கைது செய்து அழைத்துச் சென்றார்கள். இறைவனின் கருணையால் மூன்று மாதத்தில் விடுதலை செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சென்றார். உண்மையும், ஒளியும், வழியுமான, ஆண்டவர் நான் வாழ அருள் மழை பொழிவது போல அயலவர்களையும் மாற்றுவார் என இன்னும் நான் விசுவசிக்கின்றேன்.

"கலிலேயாவிலிருந்தா மெசியா வருவார்?" என்ற கேள்வியிலே விளங்குகின்றது. நன்மைத்தனம் ஏற்பட வாய்ப்பில்லாத இடம் கலிலேயா என்பது. சேற்றிலே செந்தாமரை உருவாக்கிய இறைவன், என் அயலவர்கள் மத்தியில் ஒளியை ஏற்படுத்துவார் என்ற விசுவாசத்துடன் இறைவன் முன் நான் தோன்றி நிற்கின்றேன் நீங்களும் என் கருத்திற்காக செபிப்பீர்களா?

## செபம்

ஒடுக்கப்பட்டோரை விடுவிக்க வந்த தேவனே!உமது மீட்பு தனி மனிதனுக்கு மட்டு மல்ல, முழு அகிலத்துக்'குரியது, உம் மீட்பை அனைவரும் அனுபவிக்க வரம் தாரும். ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2011 சித்திரை 10 ஞாயிறு | | த.காலத்தின் 5ஆம் வாரம் |
| எசேக்.37:12-14 | ரோமர் 8:8-11<br>தி.பா 130:1-8 | யோவான் 11:1-45அல்லது 11:3-7, 17,20-27,33-45 |

வாழ்க்கையின் யதார்த்தமான நிலையை அனுபவிப்பதற்காக தியானிப்பதற்காக ஒதுக்கப்பட்ட தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு வாரம் இன்றாகும். மரணத்திற்கும் வாழ்விற்கும் இடையிலான ஆழமான தொடர்பினை தியானித்த நாம் இன்று அச்சத்துடன் நின்று விடாது கிறிஸ்தவத்தின் பிரபல்யமான நற்செய்தியின் பேரில் எமது அவதானத்தைச் செலுத்துவோம். மரணம் வாழ்வின் முடிவாகாது, உயிர்ப்பு எமது உரிமையாகும் என்பதை திருச்சபைத் தாயானவர் எம் முன்னிலையில் வைக்கின்றார். அந்த உயிர்ப்பின் வல்லமையை அனுபவிப்பதற்கான வல்லமையை ஆவியானவரிடம் வேண்டுவோம்.

## முதலாவது வெளிப்பாட்டிலிருந்து

**...என் மக்களே, இதோ நான் உங்கள் கல்லறைகளைத் திறக்கப் போகிறேன். உங்களை உங்கள் கல்லறைகளினின்று மேலே கொண்டு வருவேன். உங்களுக்கு இஸ்ரயேல் நாட்டைத் திரும்பக் கொடுப்பேன். என் ஆவியை உங்கள் மீது பொழிவேன். நீங்களும் உயிர் பெறுவீர்கள் நானும் உங்களை உங்கள் சொந்த நாட்டில் குடியமர்த்துவேன்.**

## இரண்டாம் வெளிப்பாட்டிலிருந்து

**...**கடவுளின் ஆவி உங்களுக்குள் குடியிருந்தால் நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல் ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள் கிறிஸ்துவை உயிர்த் தெழச் செய்த அவரே உங்களுக்குள் குடிகொண்டிருக்கும் தம் ஆவியினாலே சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர்தெழச் செய்வார்.

## பரி.நற்செய்தியிலிருந்து

**உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர். உயிரோடு இருக்கும் போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாக மாட்டார். இதை நீ நம்புகிறாயா? இயேசு மீண்டும் உள்ளம் குமுறியவராய் கல்லறைக்கு அருகில் சென்றார். அது ஒரு குகை அதை ஒரு கல் மூடியிருந்தது கல்லை அகற்றி விடுங்கள் என்றார் இயேசு. இறந்து போனவரின் சகோதரியான மார்த்தா அவரிடம் ""ஆண்டவரே நான்கு நாள் ஆயிற்று நாற்றம் அடிக்குமே என்றார்"" இயேசு அவரிடம் ""நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா?"" என்றார். அப்போது அவர்கள் கல்லை அகற்றினார்கள். ""தந்தையே நீர்என் வேண்டுதலுக்கு செவிசாய்த்ததற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்..."" ...""இலாசரே வெளியே வா""...""கட்டுக்களை அவிழ்த்து அவனைப் போக விடுங்கள்""...**

## ஒளியின் விழிப்புறுதல்

இறைவாக்கினரான எசேக்கியேல் வெளிப்பாடாக்கிய இறைவாக்கினை நிறைவேற்றுகின்ற ஆண்டவராம் இயேசு கிறிஸ்து நாதருள் நிரந்தரமாக இருந்து வந்த நம்பிக்கையின் பயனை இலாசர் கல்லறையிலிருந்து வெளிவரும் நிகழ்வினூடாக இறை மகன் அனுபவித்திருப்பார். என்பதில் எது விதமான சந்தேகமும் இருக்க முடியாது. அத்தோடு தந்தையை மகிமைப் படுத்துவதன் வழியாக அவரது உள்ளரங்கத்தில் ஏற்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வினையும் ஆனந்தத்தையும் வார்த்தைகளினால் கூறிட முடியாது. கல்லறையில் அழுகும் நிலையில் இருந்த இலாசரது உடல் உயிர் பெற்று, வெளியே வரும் நிகழ்வானது, இறைவாக்கானது, இஸ்ராயேல் மக்களின் முன்னிலேயே நிரூபிக்கப் படுவதன் வழியாக தந்தையின் மாட்சிமை வெளிப்பாடாகின்றது. இந்நிகழ்வு வழியாக இறை மகனை ஏற்றுக் கொள்ளாதவர்களது மனநிலை குமுறுகின்ற எரிமலை போன்றதாக இருந்திருக்கும்.

நண்பரான இலாசரின் சுகயீனத்தைப பற்றிக் கேள்விப்பட்டவுடன் இயேசு போகவில்லை. செய்தியை அனுப்பிய மார்த்தாவின் நோக்கும் நிறைவேறவில்லை. இயேசு போகும் போது இலாசரின் உடல் நாற்றமடிக்கும் நிலையில் கல்லறையில் வைக்கப்பட்டிருந்தது.

இறை மகனைக் கண்டதும் மரியாவின் வேண்டுதல் இவ்வாறாக இருந்தது. "ஆண்டவரே நீர் இங்கேயே இருந்திருந்தால் என் சகோதரன் இறந்திருக்க மாட்டான். இப்போதாவது நீர் தகப்பனிடம் கேட்டால் அவர் கட்டாயம் தருவார்." இயேசு என்னதான் செய்யப் போகின்றார் என்பது அவளுக்குத் தெரியாத போதிலும், அவரால் ஏதாவது செய்ய முடியும் என்ற நம்பிக்கை அவளுள் இருந்தது. என் ஆவியை உங்கள் மீது பொழிவேன். நீங்களும் உயிர் பெறுவீர்கள். நானும் உங்களை உங்கள் சொந்த நாட்டில் குடியமர்த்துவேன். எசேக்கியேலின் இறை வாக்கு நிறைவேறியுள்ளது. பாவம் எனும் கல்லறையிலிருந்து நான் வெளிக் கொணர்வேன். ....

இயேசு மற்றவர்களது கண்களைத் திறந்து ஒளியைக் காண்பதற்குச் செய்தவர் மாத்திரமல்ல, அதனிலும் மேம்பட்டவர் என்பதைக் காண்போம். "உயிர்த்தெழச் செய்பவனும், வாழ்வு தருபவனும் நானே." என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வர். இதை நீ நம்புகின்றாயா? என்று வினவும் அளவிலான வல்லவர் ஆவார். உலகம் கூறுகின்ற விதத்திலேயே சீடர்கள் தம் ஆசானைப் பற்றி நினைத்திருந்த தாலேயோ அவரது செயற்பாடுகளை இனங் கண்டு கொள்ள முடியாது போனது? இறை புத்திரத்தன்மையின் உரிமை யாளர்களாக அல்லவா இந்தத் திருவருகைக் காலத்தில் பயணமாகிக் கொண்டிருக்கின்றோம். நாமும் உலகைச் சார்ந்தவர்களாகவா வாழுகின்றோம். ஆவியானவர் பேரில் விழிப்புற்றவாறு தியானிப்போம். .....

**கடவுளின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்தால், நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல், ஆவிக்குரிய இயல்பைக் கொண்டிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோரல்ல. உலகைச் சாராதவர்களாக வாழ்வதற்கு புனித சின்னப்பர் இவ்வாறு அறிவுறுத்துகின்றார்.**

பாவக்கல்லறைகளில் இருந்து மீட்டெடுத்த இறை மகனே நாம் உமக்கு நன்றி கூறுகின்றோம். உலகைச் சாராதவர்களாக வாழ்வதற்கு எம்மை விழிப்புறுத்துகின்ற தூய ஆவியானவரே! உமக்கு நன்றி கூறுகின்றோம். பாவச்சேற்றிலிருந்து எம்மை மீட்டெடுப்பதற்காக உமது திருமகனை எமக்குத் தந்த இறை தகப்பனே உமக்கு நன்றி கூறுகின்றோம்.

எமது பெலவீனங்கள் காரணமாக விழிப்புறாதவர்களாக பாவச்சேற்றில் விழுகின்ற எம்மை மன்னிப்பதோடு மீண்டும் உம்மருகே வருவதற்கான விழிப்புறுதலையும், வல்லமையையும் திடத்தையும், ஆவியானவர் வழியாக எமக்குத் தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 11 திங்கள் த.காலத்தின் 34 ஆம் நாள்**
**தானி(இ) 2:1-9,15-17, 19-30, 33-62 அல்லது 2:41-62 தி.பா.23:1-6 பு.யோவான் 8:1-11**

## பரி. நற்செய்தியிலிருந்து

**இயேசு ஒலிவ மலைக்குச் சென்றார். பொழுது விடிந்ததும் .... மக்கள் அனைவரும் அவரிடம் வந்தனர். அவரும் அங்கு அமர்ந்து அவர்களுக்குக் கற்பித்தார். மறைநூல் அறிஞரும் பரிசேயரும் விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்து நடுவில் நிறுத்தி, போதகரே, இப்பெண் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடி பட்டவள். இப்படிப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச் சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்? என்று கேட்டனர். அவர் மேல் குற்றம் சுமத்த ஏதாவது வேண்டும் என்பதற்காக அவர்கள் இவ்வாறு கேட்டுச் சோதித்தார்கள்....**

## ஒளியின் விழிப்புறுதல்

இயேசுவில் குற்றம் குறை கண்டு பிடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்ட பெண்ணை தீர்ப்புக்காக அவர் முன் அழைத்து வந்தார்கள். பரிசேயர் மோயீசனின் சட்டத்தை இயேசுவிற்கு ஞாபகப்படுத்தி ஒரு சவாலை அவர் முன் வைக்கின்றனர். பரிவும், இரக்கமும், மன்னிக்கும் மனப்பான்மையைக் கொண்ட இயேசு இப் பெண்ணின் மீது கருணை கொண்டு அவளை மன்னித்து விடுதலையாக்கத் தாகம் கொண்டார். "உங்களில் பாவமில்லாதவர் முதல் கல்லை எறியட்டும்" என்று கூறி தலை குனிந்த வண்ணம் ஏதோ தரையில் எழுதுகிறார்.

மறை நூல் அறிஞர்களினதும் பரிசேயரினதும் மனச்சாட்சி அவர்கள் உள்ளங்களைத் தொட்டிருக்கும். பெரியவர் தொடக்கம் சிறியவர் வரை அங்கிருந்த ஒவ்வொருவரும் இடத்தை விட்டு விலகிச் சென்று விட்டார்கள். இயேசு தலை நிமிர்ந்து பார்க்கும் பொழுது அப்பெண்ணைத் தவிர வேறு ஒருவரும் இருக்காததால் அப்பெண்ணைப் பார்த்து, "அம்மா அவர்கள் எங்கே! நீ குற்றவாளி என்று அவர்கள் தீர்ப்பு இடவில்லையா? அப்படியானால் நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. ஆனால் மீண்டும் பாவம் செய்யாதீர்" என்று எச்சரித்து விடுதலை அளிக்கின்றார்.

## எம் பேரில்

இறை தந்தையின் கட்டளைகளை இயேசு முழுமையாக நிறைவேற்றுவதுடன் அன்பு என்னும் நற்குணத்தை அத்துடன் இணைத்து செயல் பட்டார். தவறு செய்யும் ஒவ்வொருவரையும் அன்பு செய்து அவர்களை நேர்வழிப்படுத்தி வாழ்வை மாற்றுகின்றனர். திருமுழுக்குப் பெற்ற எம் ஒவ்வொருவரிடமும் இயேசு எதிர்பார்ப்பதும் அன்பு என்னும் தூய ஆவியின் கொடையில் நிரம்பி வாழ்வதையாகும். இத் தவக்காலத்தில் நாம் எம்மையே சற்று திரும்பிப் பார்ப்போம். மற்றவரைத்தீர்ப்பிடும் பழக்கம் என்னில் உள்ளதா? மற்றவரை ஏற்று சங்கமமாக முடியாத நிலை என்னில் உள்ளதா? எத்தனை தடவை மன்னிப்பு அளிக்கின்றேன். இறைவன் அன்பார்ந்தவர். இரக்கமுள்ளவர். எம்மை மன்னிப்பவர். இருக்கும் நிலையில் எம்மை ஏற்று அரவணைக்க ஆயத்த மாக இருப்பவர். எம் தவறுகளுக்காக மனம் வருந்தி அவரிடம் சென்று மன்னிப்பைப் பெற்று எமது வாழ்வை மாற்றிக் கொள்வோம். எமது ஒவ்வொரு பாவமும் இன்று இயேசுவின் உள்ளத்தைப் புண்படுத்துகின்றது. இதை உணர்ந்து வாழ்வை திருத்தி நல் வாழ்வு வாழ முன்வருவோம்.

### செபம்

அன்பு இறைவா! இன்று எமது சமுதாயத்தில் பசி, வறுமை, இல்லிடமற்ற நிலை, தனிமை போன்ற அன்றாட சுமைகளுடன் வாழும் உம் மக்கள் மீது இரக்கம் காட்டும். இத் தவக்காலத்தில் உம் மக்களாகிய நாம் கருணையுடன் அவர்கள் மட்டில் கண்நோக்க எம் ஒவ்வொருவரின் உள்ளங்களையும் தூய ஆவியின் வல்லமையால் நிரப்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 சித்திரை 12 செவ்வாய் த.காலத்தின் 35ஆம் நாள்

| எண்ணாகமம் 21:4-9 | தி.பா 102:1-2,15-20 | பு.யோவான் 8:21-30 |
|---|---|---|

## பரி. நற்செய்தியிலிருந்து

இயேசு மீண்டும் அவர்களிடம், நான் போன பின் நீங்கள் என்னைத் தேடுவீர்கள். நான் போகுமிடத்திற்கு உங்களால் வர இயலாது..... இயேசு அவர்களிடம், "நீங்கள் கீழிருந்து வந்தவர்கள்: நான் மேலிருந்து வந்தவன். நீங்கள் இவ்வுலகைச் சார்ந்தவர்கள். ஆனால் நான் இவ்வுலகைச் சார்ந்தவன் அல்ல..... அவர்கள்,"நீர் யார்?" என்று அவரிடம் கேட்டார்கள். அவர்,"நான் யாரென்று தொடக்கத்திலிருந்தே சொல்லி வந்துள்ளேன். உங்களைப் பற்றிப் பேசுவதற்கும், தீர்ப்பிடுவதற்கும் பல உண்டு. ஆனால் என்னை அனுப்பியவர் உண்மையானவர். நானும் அவரிடமிருந்து கேட்டவற்றையே உலகுக்கு எடுத்துரைக்கிறேன்' என்றார்...... இயேசு அவர்களிடம், 'நீங்கள் மானிட மகனை உயர்த்திய பின்பு, 'இருக்கிறவர் நானே': நானாக எதையும்செய்வதில்லை. மாறாகத் தந்தை கற்றுத் தந்ததையே நான் எடுத்துரைக்கிறேன் என்பதை அறிந்து கொள்வீர்கள். என்னை அனுப்பியவர்என்னோடு இருக்கிறார் ...... அவர் இவற்றைச் சொன்ன போது பலர் அவரிடம் நம்பிக்கை கொண்டனர்.

## ஒளியின் விழிப்புறுதல்

தவறு செய்து பாவிகளாக மாறிய பழைய ஏற்பாட்டு மக்களுக்கு உன்னத அன்பினால் அன்பு செய்து வெண்கலப் பாம்பின் மூலம் விடுதலையளித்த இறைவன், புதிய ஏற்பாட்டு மக்களுக்கும் அவ்வாறே அன்பு செய்து தமது ஒரே பேறான இயேசு ஆண்டவரின் மூலம் மீட்பைத்தருகின்றார். நான் பாவி நான் பாவி என்று அங்கலாய்க்கும் இதயங்களில் இயேசு குடியேறுகின்றார். இருண்ட வாழ்வுக்கு வெளிச்சம் தரும் ஒளி அவரே. புத்துயிர் தரும் ஜீவனும் அவரே என்று குறிப்பாக எசாயா இறைவாக்கினர் வெளிப்பாடாக்கிய நற்செய்தி இது. ஆதிப் பெற்றோரின் பாவத்தின் விளைவால் மரணத்தை உரிமையாக்கிக் கொண்டவர்களை மீட்டெடுக்க தம்மையே கையளித்த இயேசுவைப் போல வாழ எம்மையும் அழைக்கின்றார். ஆயினும் தங்கள் தவறை உணர்ந்து மீண்டும் மன்னிப்புப் பெறும் போது அளவிட முடியாத இரக்கமே உருவான உன்னதரின் அன்பும் மன்னிப்பும் பெறும் மனிதர்களாக மாறுகின்றார்கள். நாங்களும் எங்கள் பாவங்களுக்கு விழிப்புற்று, இறைவிருப்பத்தையே நாடுவதற்கான வல்லமையைத் தந்தருளுமாறு இந்த தவக்காலத்தில் தூய ஆவியானவரின் அருளை கேட்டு செபிப்போம்.

## எம் பேரில்

ஆண்டவர் பேரில் கண் மனம் இதயத்தை ஏறெடுப்போம். அன்று தேர்ந்தெடுத்த மக்கள் அவரை ஏற்றுக் கொள்ள பின் வாங்கினர். ஏனெனில் கண்ணிருந்தும் குருடராக இருந்தனர். காது இருந்தும் கேட்க மறுத்து விட்டனர். பரிசுத்த ஆவியானவரின் வழியாக சகல இருளையும் அகற்றும் வல்லமை இறை மகனிடம் இருந்தது. "நானே உலகுக்கு வெளிச்சம் தரும் ஒளி" என் வழியைத் தவிர இறையன்பை நாடுவதற்கு வேறு வழியில்லை என்கின்றார் இயேசு ஆண்டவர். என் பாவத்திற்கு கழுவாயாக இருக்கின்ற இயேசுவை சந்திக்க எவ்வளவு தாகம் கொள்கின்றோம் என்பதன் பேரில் விழிப்புறுவோம்.

## செபம்

என் சுற்பாறையும், கோட்டையும், அரணுமான ஆண்டவரே! தினமும் உம் பால் கண்களை ஏறெடுக்கும் வல்லமையை தந்தருளும். உம் செவியை எனது பக்கம் திருப்பியருளும். தூய ஆவியானவர் காட்டும் வழியில் தூதுரைப் பணியினைச் செய்ய அருள் புரியும். உமது அழைப்பிற்கு நன்றியுள்ள பயனுள்ள கருவியாக செயல்படவும், வல்லமை மிக்க செயல்களைப் புரிந்து, உம்மை மகிமைப்படுத்தும் வரத்தினையும் உமது தூய ஆவியானவர் மூலமாகத் தந்தருளும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 13 புதன் த.காலத்தின் 36ஆம் நாள்**
**தானியேல் 3:14-20,24-25,28 தானி (இ)1:29-33 பு.யோவான் 8:31-42**

## பரி.நற்செய்தியிலிருந்து...

இயேசு தம்மை நம்பிய யூதர்களை நோக்கி, "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்: உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள். உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" என்றார். யூதர்கள் அவரைப் பார்த்து, "உங்களுக்கு விடுதலை கிடைக்கும்" என நீர் எப்படிச் சொல்லலாம்? நாங்கள் யாருக்கும் ஒரு போதும் அடிமைகளாய் இருந்ததில்லை. நாங்கள் "ஆபிரகாமின் வழிமரபினர் ஆயிற்றே!" என்றார்கள். அதற்கு இயேசு, "பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை என உறுதியாக உங்களுக்குச் சொல்கி றேன். வீட்டில் அடிமைக்கு நிலையான இடம் இல்லை: மகனுக்கு அங்கு என்றென்றும் இடம் உண்டு. மகன் உங்களுக்கு விடுதலை அளித்தால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள். .....

## ஒளியின் விழிப்புறுதல்

என்றும் வாழும் உயிர்த்த கிறிஸ்துவே! உம் வார்த்தையை பகிர ஆவியினால் என்னை வழி நடத்தும்.

இயேசு அவர்களிடம் நீங்கள் ஆபிரகாமின் மக்கள் என்றால் அவரைப் போல செயல் படுவீர்கள். ஆனால் கடவுளிடமிருந்து கேட்டு அறிந்த உண்மையை உங்களுக்கு எடுத்துரைத்த என்னை நீங்கள் கொல்ல முயல்கிறீர்கள் ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே. நீங்கள் உங்கள் தந்தையைப் போல் செயல்படுகிறீர்கள் என்கிறார். ஆபிரகாம் ஆண்டவரின் கட்டளை களுக்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்காது தொடர்ச்சியாக கீழ் படிகிறார். இவர்களோ தாங்கள் கடவுளின் பிள்ளைகள் என்ற எண்ணத்தில் அடம்பிடித்தவர்களாக இறுமாப்புடன் இயேசுவின் வார்த்தையை செவிமடுக்காதவர்களாக இருக்கி-றார்கள். ஆனால், கிறிஸ்து நீங்கள் மனம் மாற வேண்டும் என்று தந்தையிடம் கேட்டு அறிந்த உண்மையை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்.

## எம்மில் விழிப்புறுதல்

நாம் இறை வார்த்தையை படித்து சுவைத்து உணர்ந்து வாழ்ந்தாலும் சில சமயங்களில் இவ்வுலகைச் சார்ந்த நாட்டத்துக்கு உட்பட்டவர்களாகவே வாழ்ந்து கொண்டே போகிறோம். ஆகவே கடவுளால் இறை ஆசி பெற்றவர்கள் என்ற நோக்கில் பெருமிதம் கொண்டு சாதகமானவற்றை மாத்திரம் செய்யாமல் இயேசுவின் வார்த்தையை முழுமையுமாக ஏற்று வாழ்ந்தால், மீட்பின் ஆற்றல் படைத்த ஆண்டவரின் சக்தியை காண்போம்.

"எங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவரே! நீர் வாழ்த்தப் பெறுவீராக! ... மாட்சியும் தூய்மையும் நிறைந்த உம் பெயர் வாழ்த்துக்குரியது." (தானியேல் (இ) திருப் பாடலின் (1:29) ஓர் பகுதி) இப்பாடலை அனனியா, மிசாவேல், அசரியா என்ற இளைஞர்கள் தீச் சூளையில் எறியப்பட்ட கணத்தில் இறைவனைப் போற்றிப் புகழ்ந்தார்கள். அவர்களது விசுவாசத்தை எதுவிதமான தீய சக்திக்கும் முறியடித்திட முடியவில்லை. விசுவாசம் வெற்றி பெற்றது.

நாமும் அவர்கள் விசுவாச வாழ்வினை பின்பற்றியவாறு "நெருப்பினுள்ளே நானிருப்பினும் நெஞ்சாரப் புகழுவேன் தேவா!" என்ற பாடலுக்குள் உள்ளாகுவோம்.

## செபத்திற்குள்ளாகுவோம்

அப்பா தந்தாய்!

பாவத்திற்கு அடிமைகளாகி உமது அன்பில் நின்று பிரிந்து சென்று விடாமல், உமது விருப்பத்தை மாத்திரம் நிறைவேற்றும் அருளினை எமக்களித்து எம்மை ஆசீர்வதித்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 14 வியாழன் த.காலத்தின் 37ஆம் நாள்**
**தொடக்க நூல் 17:3-9 தி.பா105:4-9 பு.யோவான் 8:51-59**

## பரி. நற்செய்தியிலிருந்து

என் வார்த்தையைக் கடைப்பிடிப்போர் என்றுமே சாகமாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்' என்றார். யூதர்கள் அவரிடம், 'நீ பேய் பிடித்தவன்தான் என்பது இப்போது தெரிந்துவிட்டது. ஆபிரகாம் இறந்தார்; இறைவாக்கினர்களும் இறந்தார்கள். ஆனால் என் வார்த்தையைக் கடைப் பிடிப்போர் என்றுமே சாகமாட்டார் என்கிறாயே! எங்கள் தந்தை ஆபிரகாமைவிட நீ பெரியவனோ? ஆபிரகாம் இறந்தார்: இறைவாக்கினரும் இறந்தனர். நீ யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்?' என்றார்கள். இயேசு மறுமொழியாக, 'நானே என்னைப் பெருமைப்படுத்தினால், அது எனக்குப் பெருமை இல்லை. என்னைப் பெருமைப்படுத்துபவர் என் தந்தையே. அவரையே நீங்கள் உங்கள் தந்தை என்றும் சொல்கிறீர்கள். ஆனால் அவரை உங்களுக்குத் தெரியாது.....

## ஒளியின் விழிப்புறுதல்

வாழ்வு தரும் வார்த்தை எல்லாவற்றையும் தந்தையிடமிருந்து பெற்ற இறைமகனானவர் முடிவில்லாத வாழ்வை அனைவருக்கும் பெற்றுக் கொடுக்கும் தாகத்துடன் இறைவார்த்தையை வழங்குகின்றார். கடவுளிடமிருந்து வந்த வார்த்தை இரண்டு பக்கமும் கருக்கான கூரிய வாளாகி உள்ளங்களுக்கு மனமாற்றத்தினை அளிக்கின்ற வேளையில், யூதர்கள் அந்த வார்த்தையை நம்பாததால் இயேசுவை பேய் பிடித்தவன் என்ற வார்த்தையை உச்சரிக்கிறார்கள். ஆதலால் கிறிஸ்துவை இறைமகன் என காண்பதற்கு அவர்களால் முடியாது போகின்றது.

இன்றைய முதலாம் வெளிப்பாட்டில் 'கடவுள் ஆபிரகாமிடம் நீயும் தலைமுறை தோறும் உனக்குப் பின் வரும் உன் வழி மரபினரும், என் உடன்படிக்கையைக் கடைப்பிடிக்க வேண்டும்' எனக் கூறுகின்றார். ஆனால் ஆபிரகாமை தங்கள் தந்தை எனக் கூறும் இம் மக்கள் கடவுள் அனுப்பிய உடன்படிக்கை யாளரை வார்த்தையானவரை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார்கள். ஞானத்தின் ஒளியானவர் கூறுகின்ற வார்த்தையின் பொருளை விளங்கிக் கொள்ள முடியாது தத்தளிக்கின்றார்கள். சிறுகணம் அமைதியாக வார்த்தையானவர் முன் தோன்றி நிற்போம்.

## எம் பேரில் விழிப்புறுதல்.

நாம் இறைவனின் வார்த்தைக்கு உள்ளாகி, ஒவ்வொரு செயலிலும் இயேசுவோடு இணைந்தோமானால் வாழ்வின் ஊற்றானவரின் மகிமையில் பங்கு கொள்வோம். ஆதலால் வார்த்தை யானவரை வாழ்விப்பதற்கான விசுவாசத்தின் கொடையை கேட்டு செபத்திற்கு உள்ளாகுவோம்.

## செபம்

அன்போடு எம்மை அரவணைத்து நல்வழிப் படுத்தும் வார்த்தையானவரே! யாரிடம் நாம் செல்வோம். வாழ்வு வழங்கும் ஆறுதல்மிகு வார்த்தைகள் உம்மிடமன்றோ உள்ளது. எனவே அன்புத் தெய்வமே, நீர் அன்றாடம் எமக்கு வழங்கும் வார்த்தைகளை விசுவாசத்தோடு உரிமையாக்கி, முடிவில்லாத வாழ்வு பெறவும், வாழ்வளிக்கும் வார்த்தைக்கு சாட்சியளிக்கவும், எனது உடல், உளம், உள்ளாந்தரத்தினை ஒவ்வொரு கணமும் ஸ்பரிசித்து என்னை உமது அருளினால் ஆசீர்வதித்து வழிநடத்தியருளும். மறைரகசியமான அன்பினால் என்னை அன்பு செய்து வழிநடத்துகின்றாரே! உம்மைப் போற்றிப் புகழ்கின்றேன். ஆமென்.

"அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள் அவர் தம் அருஞ்செயல்களையும் அவர் வாய் மொழிந்த நீதித் தீர்ப்புகளையும் நினைவுகூருங்கள்.

(திருப்பாடல் 105.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 15 வெள்ளி த.காலத்தின் 38ஆம் நாள்**
**எரேமியா 2:1-13 தி.பாடல் 18:1-6 யோவான் 10:31-42**

## பரி.நற்செய்தியிலிருந்து

அவர் மேல் எறிய யூதர்கள் மீண்டும் கற்களை எடுத்தனர். இயேசு அவர்களைப் பார்த்து, தந்தையின் சொற்படி பல நற்செயல்களை உங்கள் முன் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றுள் எச்செயலுக்காக என்மேல் கல்லெறியப் பார்க்கிறீர்கள்? என்று கேட்டார்.

யூதர்கள் மறுமொழியாக, நற்செயல்களுக்காக அல்ல, இறைவனைப் பழித்துரைத்ததற்காகவே உன்மேல் கல்லெறிகிறோம். ஏனெனில் மனிதனாகிய நீ, உன்னையே கடவுளாக்கிக் கொள்கிறாய் என்றார்கள். இயேசு அவர்களைப் பார்த்து,... அப்படி-யானால் தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட நான் என்னை இறை மகன் என்று சொல்லிக் கொண்டதற்காக இறைவனைப் பழித்துரைக்கிறாய் என நீங்கள் எப்படிச் சொல்லலாம்?

.... என்னை நம்பாவிடினும் என் செயல் களையாவது நம்புங்கள்: அதன்மூலம் தந்தை என்னுள்ளும் நான் அவருள்ளும் இருப்பதை அறிந்துணர்வீர்கள என்றார்.

(இந்நற்செய்தியை முழுவதும் தியானத்தோடு வாசிக்கவும்.)

## ஒளியின் விழிப்பில்

தூய ஆவியானவரே, எம்மோடு தங்கி வாழ்பவரே! இந்நற்செய்தியின் ஆழத்தினைப் புரிந்து கொள்ள எமக்கு ஒளியினைத் தாரும். இன்றைய முதல் வெளிப்பாட்டில் இறை தந்தையால் தேர்ந்து எடுக்கப்பட்ட இறைவாக்கினரான எரேமியாவும், இறை விருப்பத்தினைச் செய்யும் போது துன்பங்களுக்கு ஆளாகின்றார். ஆனாலும் வலிமை வாய்ந்த வீரரைப் போல ஆண்டவர் என்னோடு இருக்கின்றார் என்று மகிமைப் படுத்துகின்றார். முன்னோரின் வாழ்க்கை வரலாறும் கிறிஸ்து நாதரின் மனக்கண் முன் தோன்றியிருக்கும். இருப்பினும் யோர்தான் நதியில் திருமுழுக்கின் போது, "என் அன்பார்ந்த மகன் நீரே! உம் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்" எனும் தந்தையின் ஒலி எக்கணமும் அவருக்குள் ஒலித்துக் கொண்டே இருந்ததனால், அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் வீரனைப் போல் முகங்கொடுத்தவாறு முன்நோக்கிச் செல்கின்றார். "தந்தையின் சொற்படியே" பல நற்செயல்களைச் செய்து காட்டி, என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள் என்கின்றார். கிறிஸ்து நாதர் இதற்கான வல்லமை எங்கிருந்து தமக்குக் கிடைத்தது என்பதை அறிந்திருந்தார். இதனாலேயே தந்தை என்னுள்ளும் நான் தந்தையுள்ளும் இருப்பதை நீங்கள் அறிந்துணர்வீர்கள் என்றார். ஆகவே நற்கனிகளைக் கொடுக்கும் தம்மோடு இணைந்து பலன் கொடுத்திட எம்மையும் அழைக்கின்றார்.

## எம் பேரில்

'நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம் உங்கள் இதயங்களைக் கிழித்துக் கொள்ளுங்கள்' என்ற இறை வார்த்தையோடு ஆரம்பித்த தவக்காலத்தின் 38ஆம் நாளினை வந்தடைந்துள்ளோம். நம் மீட்பிற்காக, துன்புறும் ஊழியனாகி பாடுகள் அவமானம் மரணம் என்பவற்றிற்கு முழுவிருப்பத்-துடன் அடிபணிந்து, இறை தந்தையானவர் சொல்வதைச் செய்யும் மகனாகி, முழுஅகிலத்- திற்கும் எமக்கும் மீட்பினை உரிமையாக்கித் தந்த பலிப்பொருளானவரது அர்ப்பண வாழ்வை நாம் இந்நாட்களில் தியானிக்கின்றோமா? இதன் பிரதி பலனாக கல்லான இதயங்களை உடைத்து கனிவுள்ள இதய உருப்பெற்று மன்னிப்பளித்து மன்னிப்பைப் பெற நாம் ஆயத்தமாகி உள்ளோமா? விழிப்புறுவோம்.

## செபம்

என் கற்பாறையும் என் கோட்டையும் நீரே ஆண்டவரே! என் நெருக்கடி வேளையில் உம்மை நோக்கி மன்றாடினேன். என் கதறல் உம் சந்நிதிக்கு எட்டியதால், எனது குரலுக்கு செவிசாய்த்தீர் ஆண்டவரே! உமக்கு நன்றியும் நமஸ்காரமும் உண்டாவதாக! ஆமென்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 சித்திரை 16 சனி த.காலத்தின் 39ஆம் நாள்

எசேக்கியேல் 37:21-28 எரேமி 31:10-13 புனித யோ. 11:45-57

## பரி. நற்செய்தியிலிருந்து

மரியாவிடம் வந்திருந்த யூதர் இயேசு செய்வதைக் கண்டு அவரை நம்பினர். ஆனால் அவர்களுள் சிலர் பரிசேயரிடம் சென்று இயேசு செய்வதைத் தெரிவித்தனர். தலைமைக் குருக்களும் பரிசேயரும் தலைமைச் சங்கத்தைக் கூட்டி, "இந்த ஆள் பல அரும் அடையாளங்களைச் செய்து கொண்டிருக்கிறானே, என்ன செய்யலாம்? அப்போது உரோமையர் வந்து நம் தூய இடத்தையும் நம் இனத்தையும் அழித்து விடுவார்களே!" என்று பேசிக் கொண்டனர். கய்பா என்பவர் அவர்களுள் ஒருவர். அவர் அவர்களிடம், "உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. இனம் முழுவதும் அழிந்து போவதைவிட ஒரு மனிதன் மட்டும் மக்களுக்காக இறப்பது நல்லது என்பதை நீங்கள் உணரவில்லை" என்று சொன்னார். இதை அவர் தாமாகச் சொல்லவில்லை. அவர் அவ்வாண்டின் தலைமைக் குருவாய் இருந்ததால், இயேசு தம் இனத்திற்காக-வும் மட்டுமின்றி, சிதறி வாழ்ந்த கடவுளின் பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்க்கும் நோக்குடன் அவர்களுக்காகவும் இறக்கப் போகிறார் என்று இறைவாக்காகச் சொன்னார். ஆகவே, அன்றிலிருந்தே அவர்கள் இயேசுவைக் கொன்று விடத் திட்டம் தீட்டினார்கள். .....

## ஒளியின் விழிப்புறுதல்

இயேசு கிறிஸ்து ஆண்டவர் உயிருள்ள தந்தையின் ஒரே குமாரனானவர். அவர் தேசத்தின் அகிலத்தின் பாவத்தின் விளைவுகளைத் தம் தோளில் ஏற்று, திருத்திட்டத்திற்கு கீழ்ப்படிந்து நடப்பதற்கு எப்போதும் விழிப்புற்றிருந்தார். இலாசரின் மரணமும் உயிர்ப்பும் அவரை கொலைகளத்திற்கு தீர்ப்பளிப்பதற்கு ஏதுவாகியது. தேவத்துவத்தின் சம்பூரணமெல்லாம் வாசம் பண்ணுகின்ற பரிசுத்தமானவரிடம் பொறுமையும் தாழ்மையும் நிறைந்திருந்தபடியால், வரும் சவால்களைத் தாங்க தூய ஆவியானவரின் துணை அவரை வழிநடத்தியது. இறை அப்பாவின் கரமும் அவரை தேற்றி அரவணைத்தது. ஆகவே தான் பரிசேயரும் தலைமைக் குருக்களும் பாஸ்கா விழாவிற்கு இயேசு வருவார் அங்கே அவரை அழித்து விடலாம் என்று திட்டங்கள் பல தீட்டினர். இறை தந்தை தமது நேரம் வரும் வரை அவரைப் பாதுகாப்பாக வழி நடத்திச் சென்று தீயோர்களின் வலையில் சிக்க விடாமல் வழிநடத்திக் காத்து வந்தார்.

## எம் பேரில்

எம் இதய கதவைத் தட்டி, புதியதொரு வாழ்வினை ஆரம்பிக்க நம்மை அழைத்து அன்பு செய்யும் இயேசு ஆண்டவர் பக்கம் நம் கண்களை ஏறெடுப்போம்.

சிதறுண்ட மக்கள் இனத்தவரின் மீட்பிற்காக தம்மைப் பலியாக்க இடமளித்த தந்தையின் திருவிருப்பத்தை ஏற்று, அனைவருக்கும் மீட்பைப் பெற்றுக் கொடுத்திட முன்வந்த ஆண்டவர் இன்று என்னிடம் எதை எதிர்பார்க்கின்றார்.

"உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவுமில்லை"

இவ்வருடப் பொதுக்கருத்தின் முன்னிலையில் இறை விருப்பத்தை அறிந்திட நான், தந்தையின் முன் செபத்தில் தரித்திருந்த கணம் அதிகரித்துள்ளதா?

இறை விருப்பத்தை அறிந்து அதனை நிறைவேற்றி சாட்சியம் பகர்ந்த விதம் எவ்வாறானது?

முடியாது போயிருப்பின் எமது தவறுக்காக மன்னிப்பை வேண்டி, அவரது திரு இரத்தத்தால் எம்மைக்கழுவி தூய்மையாக்கிட இடமளிப்போம்.

திருவிருப்பத்தை நிறைவேற்றிட நிரந்தரமும் விழிப்போடிருந்து, செபத்தின் வழி வல்லமை பெறுவோம்.

## செபம்

**பரிசுத்தமான தந்தாய்! தேசத்தின், அகிலத்தின் பாவத்தின் விளைவுகளை நீக்கிட நாம் செய்யவுள்ளதை எமக்குக் காண்பித்தருளும். இடமளிக்கின்றோம் எம்மில் செயலாற்றும். ஆமென்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 சித்திரை 17 ஞாயிறு | | குருத்து ஞாயிறு |
|---|---|---|
| ஆரம்பம் மத்தேயு 21:1-11 | எசாயா 50:4-7<br>பிலிப்பி 2:6-11 | திருப்பாடல் 22:7-8,16-19,22-23<br>மத்தேயு 26: 14-27: 66<br>அல்லது 27:11-54 |

### முன்னுரை

2011 ஆம் ஆண்டின் பரிசுத்த வாரம் இன்று ஆரம்பமாகின்றது. தவக்கால 40 நாள் ஞான ஒடுக்கத்தில் ஆழமான ஆன்மீக சக்தியைப் பெற்ற நாம் இயேசு கிறிஸ்து ஆண்டவரின் அனுபவத்தில் பங்கு கொண்டு பரிசுத்த வாரத்துக்கு உள்ளாகுவோம். இது பயணமாகும் பயணத்தினை எம் வாழ்வோடு எவ்விதம் நாம் செல்லும் பயணத்துடன் இணைத்துக் கொள்ளலாம் என்று விழிபுறுத்துவதற்கு தூய ஆவியானவரது அபிஷேகத்தை வேண்டிச் செபிப்போம்.

## முதல் மன்றாட்டு

எல்லாம் வல்ல நித்திய இறைவா! உமது திருகுமாரனின் தாழ்ச்சியினை முழு மனுக்குலமும் பின்பற்ற வேண்டும் என்று எங்கள் இரட்சகரை மனுவுரு எடுத்து சிலுவை மரணத்திற்கு உள்ளாக செய்தீர். அவர் தந்த பொறுமையின் படிப்பினையை நாங்கள் ஏற்கவும், அவருடைய உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதற்கு எம்மை தகுதியுள்ளவர்களாக்கிருளும்.

## முதலாம் வெளிபாட்டிலிருந்து

நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார்: காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார்: கற்போர் கேட்பது போல் நானும் செவிகொடுக்கச் செய்கின்றார்.... நான் கிளர்ந்தெழவில்லை: விலகிச் செல்லவுமில்லை. அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்கு வோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன்...... ஆண்டவ ராகிய என் தலைவர் துணை நிற்கின்றார்: நான் அவமானம் அடையேன்:...

## ஒளியின் விழிப்புறுதல்

நிந்திக்கப்படுதல், அடிவாங்குதல் மாத்திர மல்ல மரணத்தீர்ப்பும் பெறுதல் எல்லாவற்றையும் தாக்கி கொள்வதற்கு, அவருக்கு முகங்கொடுப்பதற்கு முடிமானதன் இரகசியம் தான், நிரந்தரமும் தந்தையின் முன்னிலையில் தோன்றியிருத்தல் அல்லது செபம் வழியாகவாகும். பீடனைக்கு உட்பட்டவர்களை திடப்படுத்தும் ஆசிரியரை போன்று செயல்படுவதற்கு, வழிகாட்டுவதற்கு முன், ஒவ்வொரு நாளும் அதிகாலையில் மகத்துவம் மிகு இறைவன் முன்னிலையில் செல்வதற்கு அவரினுல் இருந்த உள்ளார்ந்தரத் தாகத்தின்று எவ்வேளையிலும் விட்டு விலகவில்லை தமது முடியாமையை முணங்கி முணங்கி கூறிக்கொண்டிருக்காமல் தந்தைக்கு செவிமடுப்பதும் அவரது செயற்பாட்டிற்க விழிப்போடு இருந்த கொடை ஒளிமிகு அனுபவமாகும். மற்றவர் புரிந்து கொள்ளமுடியாத விசுவாசமிகு நிலைக்கு உட்செல்லுதல் செபத்தின் சிறப்பமிகு அனுபவமாகும். கலக்கமடைதல், சுய அனுதாபத்திற்கு உட்புகுதல்,வெட்கத்தினால் முகத்தை மறைத்துக் கொள்ளுதல், போன்றவற்றுக்குள் அகப்படாமல், அபிமானத்தோடு முகங்கொடுத்தல் இறை புத்திரத்தன்மையின் அபிமானமிகு உத்தானத்தின் முன்னடை யாளமாகும்.

## இரண்டாம் மன்றாட்டு

திருப்பாடல் 22:7-8,16-19,22-23 இப்பகுதியை இயேசு ஆண்டவருடன் சேர்ந்துபாடியோ அன்றேல் அவரோடு சேர்ந்து செபித்தோ அவரது உள்ளார்ந்த அனுபவத்தினை தயானித்த வண்ணமோ தரித்திருங்கள்.

## பரிசுத்த நற்செய்தி

**பின்னர் பன்னிருவருள் ஒருவனாகிய யூதாஸ் தலைமைக் குருவிடம் வந்து நான் அவரை உங்களுக"கு காட்டி கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள் என்று கேட்டான் அவர்களம் முப்பது வெள்ளிக் காசுகளை எண்ணி அவனுக்குக் கொடுத்தார்கள். அது முதல் அவன் அவரை காட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்பு தேடிக் கொண்டி ருந்தான்...... அதற்கு அவர் என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான். மானிட மகன் தம்மைப் பற்றி மறை நூலில் எழுதியுள்ளபடியே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகிறார் .....அவர்கள் உணவருந்திக்கொண்டிருந்த பொழுது இயேசு அப்பத்தை எடுத்துக் கடவுளை போற்றி அதை பிட்டு சீடருக்கு கொடுத்து இதை பெற்று உண்ணுங்கள் இது என் உடல் என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்கு கொடுத்து ...............

(பரிசுத்த நற்செய்திப் பகுதியை வாசிக்கவும்)

## ஒளியின் விழிப்புறுதல்

தந்தையை மகிமைப்படுத்தும் நீண்ட மணித்தியாலம் ஆரம்பமாகிறது நிகளும் நிகழ்ச்சிகளுக்கு அவரது உள்ளார்ந்த அனுபவங்களுக்கு விழிப்புறுதல் மிகவும் முக்கியமானதாகும். வைராக்கியத்திற்கும் கோபத்திற்கும் அன்றேல் தம்மைப் பற்றிய சுயஅனுதாபத்திற்கு உட்புகாமல் முகம் கொடுக்கின்ற எல்லா நிகழ்விலும் இயேசு ஆண்டவர் பாஸ்கா எனும் கடந்து செல்லுதலை அனுபவிக்கிறார் இப்போது இருக்கிற இடத்திலிருந்து இருக்க வேண்டிய இடத்திற்கு கடத்தல் வைராக்கியம் உள்ள இடத்தில் இருந்து அன்பு செய்கின்ற இடத்துக்கு கடந்து செல்லுதலே கிறிஸ்துவின் பாஸ்காவாகும் பழைய யூதா பாஸ்காவை மேம்பட்டுச் செல்லும் மாபெரும் பாஸ்கா இயேசு கிறிஸ்து ஆண்டவர் மரணத்தை வென்று உயிர்த்த பாஸ்காவாகும். திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுக் கொண்ட அழைப்பிற்கு முதல்வரான இயேசு கிறிஸ்து ஆண்டவரின் பாஸ்கா அனுபவம் எம் வாழ்கையின் அன்றாட நிகழ்ச்சி வழியாக கடந்து செல்லுதலைஅனுபவிப்பதற்கு காரணமாகாவிடில்நாம் அனுபவிக்கின்ற கிறிஸ்தவ வாழ்க்கைப் பயணத்தில் சாதகமான பாதகமான அனைத்து நிகழ்ச்சிகளும் எம்மை வழிநடத்துகின்ற எமக்கு தாக்கத்தை ஏற்படுத்துபவையாக்கி கொள்ளாமல்அதன் வழியாக பாஸ்கா அனுபவத்திற்கு ஊள்ளாகுவதற்கு பயணம் செல்ல வேண்டும் என்பதை வெளிபடுத்தும் நாளே குருத்துவ ஞாயிறு தினமாகும்.

## மூன்றாம் மன்றாட்டு

நீண்ட காலம் பூராகவும் முடிவைக் காண முடியாத பல பிரச்சினைகளினால் களைப்புற்று இருந்தாலும் அதைரியமுறாமல் பயணம் செய்ய வேண்டும் என்று விழிப்புறுவதற்கு கொடுத்த வரப்பிரசாதத்திற்காக அப்பா தந்தாய் உமக்கே புகழ்ச்சியாகட்டும் குருத்துவ ஞாயிறுதினத்துடன் ஆரம்பமாகி பாஸ்கா தினத்துடன் நிறைவு பெறும் பரிசுத்த வாரம் வரை வாழ்க்கையில் அனுபவிக்கும் அனைத்தும் கடந்து செல்லுதலின் வரப்பிரசா தமிகு காலம் என்பதை உரிமையாக்கிட வரமருளும்.

## இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து

கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார். எனவே கடவுளும் அவரை மிகவே உயர்த்தி, எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார்.

## செபத்தில் விழிப்புறுதல்

கிறிஸ்தவர்கள் பாடிய பாடலாக கருதப்படும் பிலிப்பு 2:6–11 வரையிலான வசனம் இயேசு கிறிஸ்து ஆண்டவரின் துன்புறுதல்,மரணம்,உயிர்ப்பு பற்றியும், ஆண்டவர் எம் முழு வாழ்வின் ஒரே ஆண்டவர் என்பதை எல்லா நாவினாலும் அறிக்கையிட்டு நமஸ்கரிப்பதற்கு இதன் வழியாக அழைப்புக் கிடைக்கின்றது. இறை மகிமையை மாட்சிமையை வெறுமையாக்கி எம்மோடு சமமான மனிதனாகிட திரித்துவத்தின் இரண்டாமானவரான ஆண்டவர் வெறுமை யாக்குதலின், கைவிடுதலின் வாழ்க்கை அனுபவம் எமக்கு பரம முன்மாதிரிகை ஆகியுள்ளது

## நாள் பூராகவும்

*எமது கடந்த கால, நிகழ்கால, எதிர்கால நிகழ்வு எதுவும் எம் வாழ்க்கையை ஆட்சிபுரியவிருக்கும் நிலையை தோற்கடித்து வெற்றிபெறுவதானது பாஜ்காவாகும் உண்மையான வெறுமையாகுதல் கைவிடுதல் இறைதிட்டத்திற்கு முழுமையாக அடிபணிவதற்கான அழைப்பானது ஆண்டவரோடு அவரது அனுபவத்தினை சுவைப்பதற்கு கிடைக்கின்ற அழைப்பாகும்.*

*பரிசுத்த வாரத்தின் அன்றாட வெளிப்பாடுகளை இயேசு ஆண்டவரின் உள்ளார்ந்த அனுபவத்திற்கு விழிப்புற்று கடந்து செல்வதற்கான தாகத்தினை ஏற்படுத்திக் கொள்வோம்.*

(புபுது கீதாஞ்சலி 221,222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 18 திங்கள்** | **பரிசுத்த வாரம்**

**எசாயா 42: 1-7 தி.பா.27:1-3,13-14 பு.யோவான் 12:1-11**

## பரி.நற்செய்தி நிகழ்ச்சி

பாஸ்கு விழாவுக்கு ஆறு நாளுக்கு முன்பு இயேசு பெத்தானியாவிற்குச் சென்றார். அங்கு அவருக்கு விருந்து அளிக்கப்பட்டது மரியா விலையுயர்ந்த நறுமணத் தைலம் ஏறக்குறைய முன்னூற்றிஇருபது கிராம் கொண்டு வந்து இயேசுவின் காலடியில் பூசி அதனைத் தம் கூந்தலால் துடைத்தார் யேசுவின் சீடருள் ஒருவனும் அவரைக் காட்டிக் கொடுக்க இருந்தவருமான யூதாசு கரியோத்து இந்தத் தைலத்தை முன்னூறு தெனாரியாவிற்கு விற்று பணத்தை ஏழைகளுக்கு கொடுத்திருக்க கூடாதா என்று கேட்டான்... அப்போது இயேசு மரியாவைத் தடுக்காதீர்கள் என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும் ஏழைகள் என்றும் உங்களோடு இருக்கின்றார்கள். ஆனால் நான் உங்களோடு என்றும் இருக்கப் போவதில்லை என்றார்.

## ஒளியின் விழிப்புறுதல்

இன்று பரிசுத்த வாரத்தின் முதல் நாள் இன்றைய நாளில் இயேசு நாதர் தம்முடைய மரணத்தைப் பற்றி வெளிப்படுத்துகின்றார். இயேசு பாஸ்கா திருவிழாவிற்கு ஆறு நாட்களுக்கு முன்பதாகவே தம்முடைய அடக்க நாளைப்பற்றிக் கூறுகின்றார். கிறிஸ்தவர்களாகிய எமக்கு இந்த ஆறு நாட்களும் விசேஷமான நாட்கள் என்பதனை நாம் சிந்தனையில் கொள்ள வேண்டும். இன்றைய நற்செய்தியில் மூவரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இயேசு உயிர்த்தெழச் செய்த இலாசர். பாவியாய் இருந்து மனமாற்றமடைந்த மரியா. இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் கரியோத்து. இலாசரின் உயிர்ப்பு இயேசு நாதரின் உயிர்ப்பிற்கு முன்னடையாளமாய் இருக்கின்றது. மரியாளின் மனமாற்றம் இறையரசின் இலட்சணங்களின் ஒன்றாகின்றது. யூதாசின் செயல்கள் இரண்டு. அரசருக்கு ஊழியம் செய்கின்ற ஒரு மனிதனின் செயல்பாட்டைச் சுட்டிக்காட்டுகின்றது.

## எம் பேரில்

விபூதிப் புதன் தொடக்கம் குருத்து ஞாயிறு வரையுமான நாற்பது நாட்களிலும், தவக்காலம் என்ற பெயரில் நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் செப தப ஒறுத்தல் முயற்சி வழியாக நம்மை நாமே திரும்பிப் பார்த்து, உள்ளத் தூய்மைக்கு அதிகமாக விழிப்புற்று நம் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, புதுப் பிறப்பை அடையும் காலம் இதுவாகும். அதாவது ஒரு கிறிஸ்தவருக்கு தவக்காலம் என்பது ஒரு வசந்தகாலமாகும். எமது ஆன்மக வாழ்க்கையில் புத்துயிர் பெற்று பிரகாசிக்கும் காலம். ஆகவே இந்த நாற்பது நாட்களும் நாம் உண்மையான மனஸ்தாபத்திற்கு உள்ளாகி இருந்தோமேயானால் இந்தப் பரிசுத்த வாரம் முழுவதும் தூய ஆவியானவருக்கு விழிப்புற்ற எம் சிந்தனை சொல் செயல் யாவற்றையும் மூடிக் கொள்ளுமாறு வேண்டுவோம்.

## செபத்திற்கு உள்ளாகுவோம்

இறை தன்மையில் இருந்து வெறுமையாகி, அடிமையின் கோலம் பூண்டு, சிலுவைச் சாவை ஏற்கும் அளவிற்குக் கீழ்ப்படிந்து, பாவத்தின் விளைவுகளில் இருந்து எங்களுக்கு விடுதலையைப் பெற்று தந்த இயேசுவே! இந்தப்பரிசுத்த வாரம் முழுவதும் உம்முடைய புத்திரத்தன்மையில் நாஙும் பங்காளியாவதற்கு நீர் எனக்குள் மறுவுருவாகியருளும்.

'ஆண்டவரே என் ஒளி. அவரே என் மீட்பு. யாருக்கு நான் அஞ்ச வேண்டும். ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம் யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும்.'

'நெஞ்சே ஆண்டவருக்காகக் காத்திரு. மன உறுதி கொள். உன் உள்ளம் வலிமை பெறட்டும். ஆண்டவருக்காகக் காத்திரு.' (தி.பா27:1,14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 சித்திரை 19 செவ்வாய் பரிசுத்த வாரம்

எசாயா 49:1-6 தி.பா 71:1-6,15,17 பு. யோவான் 13:21-33,36-38

## பரி. நற்செய்தியிலிருந்து

இப்படிச் சொன்னபின் இயேசு உள்ளம் கலங்கியவராய், 'உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்' என்று திட்டவட்டமாகக் கூறினார். யாரைப் பற்றி அவர் இப்படிக் கூறினார் என்று தெரியாமல் சீடர்கள் குழப்பமுற்று ஒருவரை ஒருவர் நோக்கினார்கள். .....

## முதல் வெளிப்பாடு

தீவு நாட்டினரே எனக்கு செவிகொடுங்கள் தொலை வாழ் மக்களினங்களே கவனி -யுங்கள். கருப்பையில் இருக்கும் போதே ஆண்டவர் என்னை அழைத்தார். என் தாய் வயிற்றில் உருவாகும் போதே என் பெயர் சொல்லிக் கூப்பிட்டார். ....

## ஒளியின் விழிப்புறுதல்

இறைமகன் இயேசு தனக்கு நடக்க இருக்கும் தந்தையின் திட்டம் என்ன என்பதனை முன்கூட்டியே சீடர்களுக்கு அறிவிக்கிறார். தான் யாரால் காட்டிக் கொடுக்கப்படப் போகிறார் என்பதனை கூறும் ஆண்டவர் தான் இவ்வுலகை விட்டு போகப் போவதையும் குறிப்பிடுகிறார். ஆனால் உலக மட்டத்திலான வாழ்வு வாழும் சீடர்களுக்கு அதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. சீமோன் பேதுரு ஆண்டவரே! நீர் எங்கே போகிறீர் என்று கேட்கும் கேள்விக்கு பதிலளிக்கும் இயேசு, 'நான் போகுமிடத்திற்கு என்னைப் பின் தொடர்ந்து வர இப்போது உன்னால் இயலாது. பின்னரே என்னைப் பின் தொடர்வாய் ' என்று கூறுகிறார். அதே வேளை பேதுருவானவர் தன்னை மும்முறை மறுத்தலிப்பார் என்பதையும் அவருக்கு வெளிப்படுத்துகிறார். இயேசு சொன்ன வார்த்தைகள் அனைத்தும் ஒரு எழுத்து பிசகாமல் நிறைவேறுவதை பரிசுத்த வேதமாகத்தினூடாக நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

## எமது பக்கம்

புனித வாரத்தில் அடியெடுத்து வைத்துள்ள நாம் இறைவார்த்தைகளின் ஆழத்தை உணர்ந்து அதன்படி வாழ முனைவோம். முதல் வெளிப்பாட்டில் கூறியுள்ளது போல் தாயின் கருவில் உருவாகு முன்னரே ஆண்டவர் எம்மை பெயர் சொல்லி அழைத்துள்ளார் என்பதனை நாம் விசுவசிப்போம் இயேசு கிறிஸ்து நாதர் ஒரு கட்டத்தில் கூறியுள்ளது போல் ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்துவதே இறைவனின் திருவுளம் என்று கூறியுள்ள இறை வார்த்தைக்கு அமைய இறை தந்தையின் திருவுளத்தின் படி எமக்கு கிடைத்துள்ள இவ் வரப்பிரசாதமான வாழ்விற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். குழந்தைகளாக எம்மை ஏற்றுக் கொண்டமைக்காக அவருக்கு நன்றிப் புகழ்பாடுவோம். இறைவனுக்கு தகுந்த பிள்ளைகளாக இறைபணி புரிந்து வாழ வரம் கேட்போம்.

## செபம்

அன்பின் இறைவா!

எமது வாழ்வின் நிகழ்வுகளில் உம்மைக் காட்டிக் கொடுக்கும் மறுத்தலிக்கும் மக்களாக வாழாமல், உமது வார்த்தையை அறிந்து அழைப்பிற்குப் பதில் கொடுக்கும் மக்களாக வாழ்ந்திடவும் நீர் அருளும் மீட்பையும் எடுத்துரைக்கும் சாட்சிகளாகிடவும் எம்மை வழிநடத்தியருளும்.

என் தலைவரே! நீரே என் நம்பிக்கை. ஆண்டவரே இளமை முதல் நீரே என் நம்பிக்கை.

பிறப்பிலிருந்து உம்மை நான் சார்ந்துள்ளேன். தாய் வயிற்றிலிருந்து நீரே என்னைப் பிரித்தெடுத்தீர். உம்மையே நான் எப்போதும் புகழ்ந்து போற்றுவேன்.

(திருப்பாடல் 71:5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 20 புதன் — பரிசுத்த வாரம்**
**எசாயா 50:4-9 தி.பா 69:8-1,21-22, 31,33-34 பு.மத்தேயு 26:14-25**

## பரி. நற்செய்தியிலிருந்து

**அப்போது பன்னிருவருள் ஒருவரான யூதாஸ் இஸ்கரியோத்து என்பவன் தலைமைக் குருக்களிடம் சென்று அவர்களிடம் எனக்கு என்ன தருவீர்கள் நான் அவரை உங்களுக்கு காட்டிக் கொடுப்பேன் என்று கூறினார் அவர்களோ முப்பது வெள்ளிக் காசு அவனுக்கு கொடுத்தனர். அதுமுதல் அவன் அவரைக் காட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தான். புளியாத அப்பத் திருவிழாவின் முதல் நாளில் சீடர்கள் இயேசுவை அணுகி வந்து, 'நீர் பாஸ்கா உணவை உண்ண உமக்கு நாங்கள் எங்கே ஏற்பாடு செய்ய வேண்டும் என்கிறீர்?' என்று கேட்டார்கள்...... மனுமகன் தம்மைப் பற்றி எழுதியிருக்கிற படி போகின்றார் மனுமகனைக் காட்டிக் கொடுப்பவனுக்கோ ஐயோ கேடு! அவன் பிறவாது இருந்திருந்தால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார் . அவரைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் "நானா ராபி" என்று கேட்க அவரும் "நீயே சொல்லி விட்டாய்" என்றார்.**

## ஒளியின் விழிப்புறுதல்

பாவ இருளில் மூழ்கிக் கிடந்த உலகத்திற்கு ஒளியேற்ற மனுவுருவெடுத்த இறைமகன் இயேசுவின் உள்ளாந்திரத்தை உணர்ந்து கொள்ள தூய ஆவியானவரின் வரம் கேட்போம்.

இறை இயேசு சீடரைத் தெரிந்து கொண்டதன் நோக்கம் தம்முடன் இருக்கவும், இறை தந்தையின் அரசைப் பரப்புவதற்காகக் தமது வல்லமையை அவர்களுடன் பகிர்ந்தளிக்கவுமே ஆகும். கிறிஸ்து இயேசு நாதர் செய்த பலவித அற்புதங்களில் தண்ணீரை இரசமாக்கல், அப்பங்களை பலுகச்செய்தல், கடல் கொந்தளிப்பை அடக்குதல், நோயாளிகளைக் குணமாக்குதல், மரித்தோரை உயிர்ப்பித்தல், பேய்பிடித்தோரை குணமாக்குதல், பாவிகள் மனமாற்றம் பெறுதல் போன்ற அற்புதங்களை உடனிருந்து பார்த்த அவரது சீடர்கள் ஆண்டவரே மெசியா எனும் விழிப்புணர்வைப் பெற்றார்கள். கிறிஸ்து இயேசு இறைவனின் ஏக மகன் என்பதற்கு சாத்தானே சாட்சி பகர்ந்த போது, மெய்சிலிர்க்க அதைத் தம் காதால் கேட்ட அவரது சீடர்களுள் யூதாசும் இருந்தாலும் பணத்தாசை காரணமாக யூதாஸ் அவரைக் காட்டிக் கொடுக்கின்றான். இந்நிகழ்ச்சியை இறை மகன் ஏற்கனவே அறிந்திருந்தாலும், அவனுக்கு எவ்வித பாரபட்சமுமின்றி அன்பு செய்கின்றார். ஏனெனில் அப்பா தந்தையின் மறைரகசியமான விருப்பப்படி யாவும் நடக்க வேண்டும் என்பதற்காக அனைத்திற்கும் இடமளித்தார். இறை அரசை அனைவருக்கும் பறை சாற்ற கருவிகளாகப் பணிபுரிந்தவர்களுடன் பிரியாவிடை உணவாக பாஸ்கா திருவிருந்தை அருந்துகின்றார். இறை திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்காக அவர் பட்ட அவமானங்கள் வேதனைகள் துன்புறுத்தல்கள் எண்ணிலடங்காது. இறைவனின் விருப்பத்திற்கு அடிபணிய முன்மாதிரிகையான வாழ்வை வாழ்ந்து காட்டிய கிறிஸ்து இயேசுவைப் பின்பற்றி நடத்தல் நம் அனைவரினதும் கடமை அல்லவா?

## எம் பேரில்

இன்று நாம் வாழும் இவ்வாழ்வு இறைவனின் பரிசல்லவா? அவரால் கிடைத்த இவ் வாழ்க்கையை நாம் எப்படி வாழ்கின்றோம்? அவருக்குப் புகழ்பாடும் விதத்திலா? நாம் செய்ய வேண்டியது என்ன? நாம் செய்வது என்ன? தம்மை மரணத்திற்குக் கையளிக்கும் ஒரு துரோகியுடனும் அன்பு கொண்டிருந்தவர் நம் இயேசு. ஆனால், நாமோ நமக்கு உதவி செய்பவர்களை உதாசீனம் செய்து தெரியாமல் யாரும் தவறு செய்தால் கூட அதற்குப் பழிவாங்கும் எண்ணத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் அது தவறல்லவா? எமது வாழ்வை அவர் விருப்பத்திற்கேற்ப மாற்றும்படி இறை யேசுவிடம் வரம் கேட்போம்.

## செபம்

அன்பின் இறைவா!

தமது வேதனைகளை கசப்பான துயரங்களை வீரத்துடன் சுமந்து சென்ற இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றி எமது கண்ணீரை வேதனைகளை உமது விலைமதிப்பற்ற அன்பினில் மறையச் செய்வதற்கான அருள் வேண்டி நிற்கின்றோம். இவையாவும் உமது திருமகன் இயேசு மூலமாக எங்களுக்கு தந்தருளும். ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 சித்திரை 21 வியாழக்கிழமை பெரிய வியாழன்
எசா 61:1-3,6,8-9 தி.பா89:20-21,24,26 யோவான் 13:1-15
வி.ப 12:18,11-14 தி.பா116:12-13,15-18 லூக் 4:16-21
1கொரி 11:23-26 தி.வெளி1:5-8

## பரி. நற்செய்தியிலிருந்து

**பாஸ்காவிழா தொடங்கவிருந்தது. தாம் இவ்வுலகை விட்டுத் தந்தையிடம் செல்வதற்கான நேரம் வந்துவிட்டது என்பதை இயேசு அறிந்திருந்தார்.... இயேசு பந்தியிலிருந்து எழுந்து, தம் மேலுடையைக் கழற்றி வைத்து விட்டு ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார்..... நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன் மாதிரி காட்டினேன்.**

(முழுமையாக தியானத்துடன் வாசிக்கவும்)

## ஒளியில் விழிப்புறுதல்.

தம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களை அடிமை வாழ்விலிருந்து மீட்பதற்காக "யாஹவே" ஆண்டவர் தலைப்பேறுகளை அடித்த வண்ணம் எகிப்து தேசத்தைக் கடந்து சென்ற அந்த பரிசுத்த இரவில், தலைப்பேறான செம்மறி ஆட்டுக்குட்டியின் இறைச்சியை உண்டு, இரத்தத்தை நிலைவாசல் படிகளில் பூசியிருந்த அனைவரும் மரணத்தினின்று விடுதலை பெற்றனர். ஆந்த இரவிலேயே மோயீசனின் வழிகாட்டுதலோடு செங்கடலைக் கடந்து உடன்படிக்கை தேசத்தை நோக்கி செய்த பயணம் யூதர்களின் பாஸ்காவாகும். இந்த கேந்திரமயமான அனுபவத்தை கொண்டாடிய வண்ணம் அதற்கு உள்ளாகி வருடந்தோறும் நடாத்திய சம்பிரதாய சடங்கின் வழியே பாஸ்கா விருந்தானது விசேடமானதாகும்.

கடைசி இராவுணவின் போது "என் நினைவாக இதைச்செய்யுங்கள்" என்று கூறிய வண்ணம் அனைத்து மக்களினதும் மீட்பிற்காக, அப்பத்தையும் இரசத்தையும் எடுத்து, அதனை உடலாகவும், இரத்தமாகவும் கையளித்து புதிய உடன்படிக்கையின் பாஸ்கா விருந்தான திவ்ய நற்கருணையை ஏற்படுத்தினார். புதிய உடன்படிக்கையின் செம்மறியாட்டுக்குட்டியான ஆண்டவரின் கல்வாரிப் பலி இவ்வாறு அடையாள மிட்டுக் காட்டப்படுவதோடு திருப்பலியின் மூலம் அன்றாடம் பலியாகி ஆண்டவர் திவ்ய நற்கருணையில் உயிருள்ளவராக காட்சியளி க்கிறார்.

திவ்ய நற்கருணைக்கு உரிய ஆராதனையை செலுத்தவும் நமஸ்காரம் செய்யவும், அடுத்தவர்க்காக பலியாகும் வாழ்க்கைக்கு எம்மைக் கையளிக்கும் வல்லமையையும் வேண்டி, நற்கருணை ஆண்டவரின் திருமுன்னிலையில் முழந்தாளில் விழுந்து வணக்குவோம்.

கிறிஸ்துவின் உள்ளாந்தரத்தை நன்கு அறிந்த அன்பார்ந்த சீடர் யோவான், பாதங் கழுவுதல், சீடத்துவம் குறித்து எமது அவதானத்தை செலுத்துவோம். மூன்று வருட காலம் இறை அரசிற்காக சீடர்களை உருவாக்கிய இறைமகன், இவ்வுலகினின்று விடைபெறும் கடைசி இரவில் அந்த விசேட நிகழ்வான பாதங்கழுவுதலை செய்து, பாதங் கழுவுதல், கழுவ இடமளித்தல் என்பது சீடத்துவத்தின் ஒரு முக்கிய குணாதிசயம் என்பதை உறுதிப்படுத்தினாரா?

சர்வ வல்லமை மிக்க ஆண்டவர் இறைமகன் மூலம் பாவியான மனிதனின் பாதத்தை கழுவி அவனை உயர்த்த முற்பட்டது மனித ஞானத்திற்கு மேம்பட்டதாயினும், அன்று சீடர்கள் இடமளித்ததைப் போன்று நாமும் எமது பாவங்களைக் கழுவ இறை அன்பிற்கு இடமளிப்போம். பலவீனமான மனிதனை இறை புத்திரத்தன்மைக்கு கொண்டு சென்ற இறைமகன் எமது பாவங்களையும் இல்லாதொழித்து கடத்தலை அனுபவிப்பதற்கு உதவுகிறார் என்பதை உரிமையாக்கிக் கொள்வோம்.

## செபம்

இறை இயேசுவே,

அடுத்தவரைப் பற்றிய விமர்சனம், தீர்வை, இருளான எண்ணங்களால் நிறைந்துள்ள என் உள்ளத்தை தூய்மையாக்க இடமளிக்கிறேன். ஒவ்வொருவரும் இருக்கிற நிலைகளிலேயே அவர்களை ஏற்றுக்கொள்ளவும், மன்னிக்கவும், மன்னிப்பைப் பெறவும், அன்பால் நிரம்பிய ஒன்றுபட்ட பகிர்வு வாழ்வு வாழ்வதற்கும் வல்லமையை தந்தருளும். சுயமகிமையினின்று இறைமகிமையை நோக்கி செல்லவும், இறைவிருப்பத்திற்கமைய வாழவும் வேண்டிய தூய ஆவியின் வல்லமையைத் தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2011 சித்திரை 22 வெள்ளி | | திருப்பாடுகளின் வெள்ளி |
| எசா.52:18 53:12 | தி.பா.31:2,6,12-13,15-17,25 எபி.4:14-16,5:7-9 | புயோவான் 18:1-9:42 |

## முதலாம் வெளிப்பாட்டிலிருந்து

**இதோ என் ஊழியர் சிறப்படைவார். அவர் மேன்மைப்படுத்தப்பட்டு உயர்த்தப்பட்டு பெரிதும் மாட்சியுறுவார்... மெய்யாகவே நம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்... அவரோ நம் குற்றங்களுக்காக காயமடைந்தார். நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்... அவர் ஒடுக்கப்பட்டார். அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக் குட்டிபோலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் தம் வாயைத் திறவாதிருந்தார். என் மக்களின் குற்றத்தை முன்னிட்டு கொலையுண்டார்... ஏனெனில் அவர் தம்மையே சாவுக்குக்கையளித்தார்...**

## ஒளியின் விழிப்புறுதல்

தவக்காலத்தின் கடைசிக் கட்டத்திற்கு அடி எடுத்து வைத்துள்ள நாம் இன்றைய வெளிப்பாடுகளினூடாக இறைமகனாம் இயேசுவின் திருமுன் தோன்றி நிற்போம். தூய ஆவியானவரே இயேசுவின் உள்ளரங்கத்தைக் காண எம்மை வழி நடத்தும். பல வருடங்களுக்கு முன் எசாயா இறைவாக்கினர் மூலம் வெளிப்படுத்திய இறைவாக்கு எடுத்துக் காட்டும் துன்பப்படும் ஊழியர் வேறு எவரும் இல்லை. நீரே தான் என்பதை தூய ஆவியானவர் இயேசு நாதருக்கு எடுத்துக் காட்டியிருப்பார். தம்மைப் பற்றி அப்பா தந்தையின் மறைரகசியமான செயற்பாடுகளை எசாயா இறைவாக்கினரின் இறைவாக்குகளினூடாக காணுகின்ற அவர் எல்லா இறை வார்த்தை களையும் உரிமையாக்கிக் கொண்டு 'அப்பா தந்தையே உமது விருப்பத்தைத் தவிர எனக்கு வேறு எதுவும் இல்லை' என எடுத்துக் கூறும் அளவிற்கு கீழ்ப்படிந்தார் அவர் படப்போகும் பாடுகளுக்கும் வேதனைகளுக்கும் முகம் கொடுப்பதற்கு ஆயத்தமானளதுடன் சாபத் திற்குரிய சிலுவையை ஏற்றுக் கொண்டார். தனிமை, எவரும் இல்லாமை, பாலைவன அனுபவங்கள் அவரைப் பின் தொடர்ந்தன. இறையன்பின் செயற்பாடானது தமக்குள் முழுமையாக நிறைவேறுவதற்கு இடமளித்து, இறை புத்திரத் தன்மையுடன் கொடூரமான மரணத்திற்கு முகம் கொடுக்க ஆயத்தமானார்.

## எமது பேரில்

கண்களை மூடிய வண்ணம் சிலுவையில் தொங்குகின்ற சிலுவை அடிவாரத்திற்குச் செல்வோம். இயேசு ஆண்டவரின் உடலில் இருந்து வழிந்துவரும் திரு இரத்தத்தினால் எம்மைக் கழுவ இடமளிப்போம். சிலுவை அடிவாரத்தில் எம்முடன் இருக்கும் பேறு பெற்ற தாயார் எம்மை அரவணைத்த வண்ணம் தமது வலது கையினால் அவரது திருக்குமரனின் உடலில் இருந்து வழிந்து வரும் இரத்தத்தால் எமக்கு திரு முழுக்கு கொடுப்பதைக் காண்போம். இறைமகனின் இரத்தத்தினால் பாவப் பரிகாரம் பெற்ற நாம் உரிமையாக்கிக் கொண்ட மீட்பை அரவணைத்துக் கொள்வோம்.

உரிமையாக்கிக் கொண்டேன் நீர் எனக்குத் தந்த வெகுமதியை, விலை மதிக்க முடியாத வரமல்லவோ ஆண்டவரே! உம்முடைய மீட்பு எனக்கு உரியதே, அதை நான் அரவணைத்துக் கொண்டேன்.

## செபத்திற்குள்ளாகுதல்

**அன்பின் இரத்தத்தினால் எம்மையும், தேசத்தையும், சங்கத்தையும் மூடி இருந்த பாவங்களைப் போக்கிட பாஸ்கா மறை இரகசியத்தினால் சங்கமமாவதற்கும் உமது இறையரசின் மகனாக,மகளாக வாழ்ந்திட, திருமகனின் புத்திரத் தன்மையை எமக்களித்திட திருவுளம் கொண்டீரே நன்றி தந்தையே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011சித்திரை 23 சனி எதிர்பார்ப்பின் பெரிய சனி**
**இயேசு நாதரின் மரணத்தினை நினைவு கூரும் முகமாக இன்றைய நாளில் வார்த்தை வழிபாடுகளும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படுவதில்லை.**

அல்லேலுய்யா சனியாகிய இன்றைய நாள் எதிர்பார்ப்பின் நாளாகும். இயேசு நாதரை சிலுவை மரத்தில் கொன்று அடக்கம் செய்து, கல்லறைக்கு பெரும் காவல் வைத்தார்கள். வாழ்வளிக்க வந்த வல்லப தேவனை, எவரும் எதுவும் தன் பிடியில் வைத்திருக்க முடிந்ததா? காற்று, இடி, மின்னல், மழை வழியாக இயற்கை ஒவ்வொன்றும் வார்த்தையானவரின் வாழ்க்கையின் வார்த்தைக்கு சான்று பகர்ந்த வண்ணம் இருந்தன. இந்த தேவாலயத்தை இடித்து விடுங்கள் மூன்று நாட்களில் கட்டி யெழுப்புவேன். இயற்கை வழியாக பேசும் இறைவனின் குரலொலியானது, அவரை சிலுவையில் அறைந்து கொல்ல ஒத்துழைப்பு வழங்கிய ஒவ்வொருவரின் உள்ளங்களையும் அதிர வைத்த வண்ணம் இருந்திருக்கலாம். ஆனால், மீட்பின் வாக்குறுதியாளரைப் பெற்ற நம்பிக்கையின் தாயாரோ இறைவன் அளித்த வாக்குறுதிகள் பலனளிக்கின்ற விதத்தை விசுவாசக் கண்களால் கண்டு இறைவனைப் போற்றிப் புகழ்ந்த வண்ணம் இருந்திருப்பார் என்பது மாபெரும் உண்மையாகும்.

பல்லாண்டு காலமாக மக்கள் எதிர்பார்த்திருந்த மீட்பாளர் இறை வாக்காளர் உரைத்த படியே கன்னி மரியா கருத்தாங்கிப் பெற்றெடுத்தார். இறைவாக்கினர் சிமியோன் சொன்னது போல் அன்னையின் உள்ளத்தை கூரிய வாள் ஊடுருவியது. திருமகனானவர் "அனைத்தும் நிறைவேறிற்று" என்று தம் உயிரைத் தந்தையிடம் ஒப்படைத்த வார்த்தை அன்னையின் உள்ளத்தில் எதிரொலித்தவாறு இருந்திருக்க வேண்டும். நம்பிக்கையில் தளர்ச்சியுறாத தாயானவர் விசுவாசக் கண்கள் சோர்வுறவில்லை. தந்தாய் உமது வாக்குறுதி நிறைவேறி யிருக்கின்றது. மூன்றாம் நாள் வெற்றியின் திருநாள் என்பதை உரிமையாக்கி கொண்டிருந்த தாயார், பயந்து வாடியவாறு இருந்த சீடர்களுடன், இறைவன் அளித்த வாக்குறுதிகளை பகிர்ந்த வண்ணம் தாயானவர் எதிர்பார்ப்பின் நம்பிக்கையின் தாயாராக வீற்றிருந்தார். கடந்து செல்லுதலின் பாஸ்கா ஒவ்வொருவரையும் நெருங்கிய வண்ணம் இருந்தது.

## செபம்

அப்பா தந்தாய்! உமது திருமகனின் வாயிலாக எமக்களித்த மீட்பிற்காக நன்றி கூறுகின்றோம். பாஸ்காப் பயணம் எம் ஒவ்வொருவருக்கும் மீட்பின் வழி என்பதை உரிமையாக்கி வாழ வரமருளும்.

இன்று நடு இரவு பாஸ்காப்பலியின் போது வாசிக்கப்படும் வெளிப்பாடுகள்

1. தொடக்க நூல் 1:1-2:2 அல்லது
   தொ .நூல் 1:1,26-31
   பதிலுரை திருப்பாடல்
   104: 1-2,5-6,1,12-14,24,35
   அல்லது தி.பா 33:4-7,12-13,2,22
2. தொடக்கநூல் 22: 1-18 அல்லது
   தொ .நூல் 22:1-2, 9-13, 15-18
   பதிலுரை திருப்பாடல் 16: 5,8-11
3. விடுதலைப்பயணம் 14: 15- 15: 1
   பதிலுரை வி. பயணம் 15:1-6,17-18
4. எசாயா 54: 5-14
   பதிலுரை திருப்பாடல் 3:1-5,10-12
5. எசாயா 55: 1-11
   பதிலுரை எசாயா 12: 2-6
6. பாருக் 3: 9-15, 32-4:4
   பதிலுரை திருப்பாடல் 19:7-10
7. எசேக்கியேல் 36: 16-28
   பதிலுரை திருப்பாடல் 42:2,4,43:3-4
   தி.பா 12:2-6,51:12-15, 18-19
8. உரோமர் 6: 3-11
   பதிலுரை திருப்பாடல் 118:1-2, 16-17,22-23
9. புனித மத்தேயு 28:1-10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 24 ஞாயிறு பாஸ்கா ஞாயிறு திருப்பலி**

தி.தூ.பணி 10:34,37-43 தி.பா 118:1-2, 16-17,22-23 1கொரி.5:6-8 அல்லது கொலோ 3:1-4 பு.யோவான் 2:1-9 பு.மத்.28:1-10

* இன்று கிறிஸ்துவின் உயிர்ப்பு விழா.
* நாம் உயிர்த்தோம் என்று நினைவுபடுத்துகின்றது
* நாம் உயிர்ப்போம் என்ற நம்பிக்கையைத் தருகின்றது.

கிறிஸ்தவர்களாகிய எமக்கு இன்றைய நாள் பெருமகிழ்ச்சியளிக்கின்ற நாளாகும். கிறிஸ்து உயிர்க்கப்படவில்லை என்றால் நாங்கள் பறை சாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும். என்று புனித பவுல் கூறுவது ஆண்டவரது உயிர்ப்பின் நாளாகிய இன்றைய நாளின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தியவாறாகும். உயிர்ப்பு என்பதன் யதார்த்தம் ஆண்டவர் இன்றும் எம்முடன் உயிர் வாழ்கின்றார் என்பதாகும். அவரை அகிலமெங்கிலும் சந்திக்க முடியும். இன்று உலகெங்கிலும் பலர் அவரைச் சந்தித்து நெருங்கிய தொடர்பு கொண்டு வாழுகின்றார்கள் என்பது இரகசியமாகாது.

## முதலாம் வெளிப்பாட்டிலிருந்து

அப்போது பேதுரு பேசத் தொடங்கி, "கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை" என்பதை நான் உண்மை-யாகவே உணர்கிறேன். .... திருமுழுக்குப் பெறுங்கள் என்று யோவான் பறைசாற்றிய பின்பு கலிலேயா முதல் யூதேயா முழுவதிலும் நடந்தது உங்களுக்குத் தெரியும். கடவுள் நாசரேத்து இயேசுவின் மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்தால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்...... மக்கள் அவரைச் சிலுவையில் தொங்கவைத்துக் கொன்றார்கள். ஆனால் கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பிக் காட்சி அளிக்கச் செய்தார்.

## ஒளியின் விழிப்புறுதல்

புனித பேதுருவானவர் சங்கமமாகப் பெற்ற அனுபவத்தையே இன்றைய முதலாம் வெளிப்பாட்டில் இன்று காண்பதற்கு முடியுமாகின்றது. இவர் இயேசுவுடன் நெருங்கிப்பழகிய சீடரான போதிலும், அவரது பாடுகள் மரணம் என்பன முன்னிலையில் அவரைப் புறக்கணித்தவராவார். ஆயினும் ஆண்டவரது உயிர்ப்பின் பின் ஆவியானவரது திருப்பொழிவைப் பெற்றதன் பின்னர் ஆண்டவரது பாடுகள் மரணம் உயிர்ப்பின் மறைரகசியம் பற்றி சாட்சிபகர்கின்ற விதத்தையே இன்று காணுகின்றோம்.

கிறிஸ்தவம் உலகமெங்கும் பரவுவதற்கான காரணம், ஆரம்ப காலத்து சீடர்களது சாட்சி பகர்தலாகும். கிறிஸ்தவர்கள் என்ற விதத்தில் எமது சாட்சி பகர்தல் எவ்வாறு அமைந்துள்ளது. கிறிஸ்துநாதர் பற்றிய அனுபவம் எத்தகைய - தாகியுள்ளது.அவரைச் சந்தித்தல், உறவு கொள்ளுதல் எவ்வாறாகியுள்ளது. மற்றவர்களுக்கு அவரை அளிக்கின்றோமா? தூய ஆவியானவரே எமது உண்மையான நிலையை எமக்குக் காண்பித்தருள்வீராக!

## பரி.நற்செய்தியிலிருந்து

வாரத்தின் முதல் நாளன்று விடியற் காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார்: கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார். எனவே அவர் சீமோன் பேதுரு-விடமும் இயேசு தனி அன்பு கொண்டிருந்த மற்றச் சீடரிடமும் வந்து, "ஆண்டவரைக்கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டனர்: அவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே வைத்தனரோ, எங்களுக்குத் தெரியவில்லை!" என்றார். இதைக் கேட்ட பேதுருவும் மற்றச் சீடரும் கல்லறைக்குப் புறப்பட்டனர். இருவரும் ஒருமித்து ஓடினர். மற்றச் சீடர் பேதுருவை விட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார்..... நேரே அவர் கல்லறைக்குள் நுழைந்தார். அங்குத் துணிகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். .... உள்ளே சென்றார், கண்டார்: நம்பினார். இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்துகொள்ளவில்லை.

## ஒளியின் விழிப்புறுதல்

'கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்றச் சீடரும், உள்ளே சென்றார், கண்டார்: நம்பினார்.'

இது அவர்கள் தனித்தனியாகப் பெற்ற அனுபவமில்லை சங்கமமாகப் பெற்ற அனுபவமாகும். ஆண்டவரது திருவுடல் அங்கில்லை என்பதைக் கண்டனர். ஆண்டவர் உயிர்த்தெழுந்து விட்டார் என்பதே அங்கு உறுதிப்படுத்தப்பட்டது. 'இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் எனும் மறைநூல் வாக்கை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.' என்பதை நற்செய்தியாளர் முன் வைக்கின்றார். இது சீடர்களது சாட்சி பகர்தலாகும். அதன் பின்னர் தான் அது உண்மை என்பது பரவத் தொடங்கியது. அன்றிலிருந்து ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் வரையிலாக அந்த உண்மையை விசுவசிப்பதோடு மாத்திரமன்றி உயிருடன் வீற்றிருக்கின்ற இயேசு ஆண்டவரைத் தங்களது வாழ்க்கையில் அனுபவித்தவாறு அதற்கு சான்று பகர்கின்ற இலட்சக்கணக்கான மக்கள் இன்றும் இருக்கின்றனர். உண்மையிலே ஆண்டவர் எம் மத்தியிலே வாழுகின்றார்.

## இரண்டாம் வெளிப்பாட்டிலிருந்து

நீங்கள் கிறிஸ்துவோடு உயிர் பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றை நாடுங்கள். அங்குக் கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார். இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றியே எண்ணுங்கள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவோடு இறந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்வு அவரோடு இணைந்து கடவுளிடம் மறைந்து இருக்கிறது. கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும் பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள்.

## ஒளியின் விழிப்புறுதல்

விந்தைமிகு மறை இரகசியமொன்றைப் பவுலடிகளார் வெளிப்படுத்துகின்றார். அதாவது இயேசு ஆண்டவரோடு நாமும் உத்தானமடைந்துள்ளோம் என்பதாகும். அதாவது பாவத்தின் காரணமாக நாம் இறந்திருந்த போதிலும், கிறிஸ்து நாதரது துன்புறுதல், மரணம், உயிர்ப்பு வழியாக நாம் சதாகால வாழ்க்கைக்கு உரிமை பெற்றுள்ளோம் என்பதாகும். ஆகவே இறை அரசின் பேரில் கண்களை ஏறெடுக்கும்படி புனித பவுலடிகளார் அழைப்பு விடுக்கின்றார்.

* நாம் ஆசிப்பவை யாவும் உலகைச் சார்ந்தவையா? அல்லது இறையரசை சார்ந்தவையா?

* இறைவனது ஆளுமைக்குட்பட்டா நாம் வாழுகின்றோம்? அல்லது உலக ஆளுமைக்கேற்பவா நாம் வாழுகின்றோம்?

ஆவியானவரே எம்மைக் காண்பித்தருளும்.

## செபம்

*தூய ஆவியானவரே! எப்போதும் உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்து அவருடன் ஆழமான உறவு கொண்டு வாழுவதற்கான வல்லமையைத் தந்தருளும். அன்றாடம் முகங் கொடுக்கின்ற நிகழ்வுகளுள் உயிர்த்த ஆண்டவரைச் சந்திப்பதற்கான விழிப்புறுதலைத் தந்தருளும்.*

***ஆண்டவரது வலக்கை உயர்ந்தோங்கியுள்ளது. ஆண்டவரது வலக்கை வலிமையாய் செயலாற்றியுள்ளது. நான் இறந்தொழியேன். உயிர் வாழ்வேன்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 சித்திரை 25 திங்கள் | | |
|---|---|---|
| தி.தூ.பணி 2:14,22-33 | தி.பா.16:1-2, 5,7-11 | பு.மத்தேயு 28:8-16 |

## பரி.நற்செய்தியிலிருந்து

அவர்களும் கல்லறையை விட்டு விரைவாகப் புறப்பட்டுச் சென்றார்கள். அவர்கள் அச்ச முற்றாலும் அதே வேளையில் பெருமகிழ்ச்சி யுற்றவர்களாய் அவருடைய சீடருக்கு அறிவிக்க ஓடினார்கள். திடீரென்று இயேசு அவர்களை எதிர்கொண்டு வந்து வாழ்த்தினார். அவர்கள் அவரை அணுகி அவர் காலடிகளைப பற்றிக் கொண்டு பணிந்து நின்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களிடம், அஞ்சாதீர்கள்! என் சகோதரர்களிடம் சென்று அவர்களைக் கலிலேயாவுக்குப் போகுமாறு சொல்லுங்கள். அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார். அவர்கள் போய்க் கொண்டிருந்த போது காவல் வீரர்கள் சிலர் நகரத்திற்குள் சென்று தலைமைக் குருக்களுக்கு அறிவித்தனர். அவர்கள் மூப்பர்களுடன் கூடிக் கலந்து ஆலோசித்து...

## ஒளியின் விழிப்புறுதல்

"என் உயிரே! மாவேந்தராம் ஆண்டவரைப் போற்று"

சீடர்கள் அச்சமுற்றாலும் மகிழ்ச்சியுற்றார்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பையும், சீடர்களின் மகிழ்ச்சியையும் காவலர் மூலம் கேள்வியுற்ற ஆளுநர்கள் அவரைத் திருடிச் சென்று விட்டார்கள் என கதையைப் பரப்பி விட்டார்கள். இந்நிகழ்வில் அவர்கள் தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

புனித பேதுரு முதல் வெளிபாட்டில், தாவீது அவரைப்பற்றிக் கூறியதை வெளிப்படுத்துகின்றார். (31) அவர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை முன்னறிந்து, 'அவரைப் பாதாளத்தில் ஒப்படைக்க மாட்டீர். அவரது உடல் படுகுழியை காணவிடமாட்டீர்' என்று கூறியிருக்கிறார். கடவுள் இந்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள். தாவீது கூறியதை பேதுரு கண்டதாக கூறியுள்ளார்.

## எம்மில் விழிப்புறுதல்

உயிர்த்த கிறிஸ்துவின் நிகழ்வு எம் சமுதாயத்திலும் நன்மையாக நடந்தாலும் அதை தீமையாக மாற்றியமைக்கக் கூடியவர்களாகவா வாழ்ந்து வருகிறோம்? அவ் வாழ்க்கையிலிருந்து விலகி உயிர்த்த கிறிஸ்து நம்மோடு இருக்கிறார். நம் வலப்பக்கம் இருக்கிறார். நமக்கு தந்த பரிசுத்த ஆவி எம்மை வழி நடத்துகிறார். என நித்தம் நித்தம் விழிப்புற்று வாழ்வோம். அப்போது அவரின் கொடைகள், கனிகள் அருங்கொடைகள் அனைத்தும் எம்மீது நிறைவாகப் பொழிவார். அவரின் உயிர்ப்பின் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளுகின்ற நாம், நாம் பெற்றுக் கொண்ட மகிழ்ச்சியை, சமாதானத்தை, அன்பை மற்றவர்களோடு பகிர்ந்து, எங்கும் உயிரோடு வாழ்கின்ற ஆண்டவர் நமக்கருளும் கொடைகளை வெளிப்படுத்துவோம்.

## தாயாரின் அனுபவம் ஒன்று

ஏழைத்தாயார் ஒருவர் விறகு வெட்டுகையில், அத்தடி கண்ணில் குத்தியது. வேதனையில் வாடிய அவர் அயலவர்களிடம் இதை அறிவித்ததும், வைத்தியசாலைக்கு அவரை அழைத்துச் சென்றார்களாம். உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்திட சீட்டு வழங்கப்பட்டது. எவரது உதவியுமற்ற தாயார், தேவ நற்கருணையில் உயிரோடு வாழுகின்ற ஆண்டவரைச் சந்தித்து தெய்வீக வைத்தியரிடம் தன்னைக் குணப்படுத்துமாறு வேதனையோடு வேண்டி நின்றார். அதன் பின் அவரது கண்ணின் வேதனை குறைந்தது குணமடைந்தார்.

"வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர் உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு. உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 சித்திரை 26 செவ்வாய்

| | | |
|---|---|---|
| தி.தூ.பணி 2:36-41 | தி.பா.33:4-5, 18-20,22 | பு.யோவான் 20:11-18 |

## பரி.நற்செய்தியிலிருந்து

மரியா கல்லறைக்கு வெளியே நின்று அழுதுகொண்டிருந்தார்: அழுது கொண்டே கல்லறைக்குள் குனிந்து பார்த்தார். அங்கே வெண்ணாடை அணிந்த இருவானதூதரை அவர் கண்டார். இயேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலைமாட்டிலும் மற்றவர் கால் மாட்டிலுமாக அவர்கள் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் மரியாவிடம், 'அம்மா, ஏன் அழுகிறீர்?' என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம், 'என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய் விட்டனர்: அவரை எங்கே வைத்தனரோ எனக்குக் தெரியவில்லை' என்றார். இப்படிச் சொல்லிவிட்டு அவர் திரும்பிப் பார்த்தபோது இயேசு நிற்பதைக் கண்டார். ஆனால் அங்க நிற்பவர் இயேசு என்று அவர் அறிந்து கொள்ளவில்லை. இயேசு அவரிடம், 'ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?' என்று கேட்டார்.....நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், 'என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்' எனச் சொல் என்றார். மகதலா மரியா சீடரிடம் சென்று, 'நான் ஆண்டவரைக் கண்டேன்' என்றார்: தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னார்.

## ஒளியின் விழிப்புறுதல்

கடந்த நாட்கள் சில கிறிஸ்தவர்களாகிய எமக்கு மிகவும் விசேசமான நாட்களாகும். அதாவது கிறிஸ்து ஆண்டவரது துன்புறுதல், மரணம், உயிர்ப்பு என்பனவற்றைப் பற்றித் தியானித்ததோடு எமது வாழ்வைப் புது வாழ்வாக்கிக் கொள்வதற்காக வேண்டி அவற்றை வழியாக்கிக் கொள்வதற்கான வழிகாட்டு தலையும், தூய ஆவியானவர் எமக்கருளினார். அத்தோடு நின்று விடாது கிறிஸ்து ஆண்டவர் பேரில் எமது கண்களை ஏறெடுப்பதற்காக வேண்டி ஆவியானவர் எம்மைத் தயார் படுத்துகின்றார். இன்றைய வெளிப்பாடு வழியாக ஆண்டவரது அழைப்புப்பற்றியும் தமது பணியின் பின்னர் மீண்டும் தந்தையோடு எப்போதும் இருப்பதற்காக மீண்டும் செல்ல வேண்டும் என்பது பற்றியும், நாம் நினைவுறுத்தப்படுகின்றோம். தம் வாழ்நாளில் தமக்குக் கிடைத்த அழைப்பின் பேரில் எப்போதும் விழிப்புறுதலோடு இருந்ததோடு அதனை நிறைவேற்றுவதற்கு ஒரு போதும் தயங்கவில்லை. அவரது தாகத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார். 'நான் பெற வேண்டிய ஓர் திருமுழுக்கு ஒன்று உண்டு. அது நிறைவேறுமளவும் நான் மிகவும் மன நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்றேன். ஆண்டவர் தந்தையின் திருவிருப்பத்தை மனிதர் எவராலும் தாங்கிக் கொள்ள முடியாத துன்ப துரிதங்கள் நிறைந்த மரணத்தோடு நிறைவேற்றுகின்றார். ஆனாலும் தந்தையினால் உயிர்த்தெழுப்பப்பட்டு அனைவரிலும் மேலான நிலைக்கு உயர்த்தப் பெறுகின்றார்.

## எம்பேரில்

அவரது உயிர்ப்பின் மகிழ்வை அனுபவிக்கின்ற நாம், எப்போதும் அவரைத் தேடிச் செல்வோம். அவரது மரணத்தின் வாயிலாக எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள அழைப்பினை உரிமையாக்கிக் கொள்வோம். மற்றவர்களுக்காக வேண்டி அனுபவிக்க நேரிடுகின்ற மரணங்களின் போது விழிப்புறுவோம். எமது வாழ்க்கை நிகழ்வுகளின் போதும் உயிர்த்த ஆண்டவரையே தேடுவோம். அவரது வீற்றிருத்தலை அனுபவிப்போம். 'நான் ஆண்டவரைக் கண்டேன்' என்று எமது அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோம். அதற்கான வல்லமையை வேண்டுவோம். புத்தம்புது பாடலொன்றை அவருக்குப் பாடுங்கள். திறம்பட இசைத்து மகிழ்ச்சி குரல் எழுப்புங்கள். ஆண்டவரின் வாக்கு நேர்மையானது. அவருடைய செயல்கள் யாவும் நம்பிக்கைக்குரியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 சித்திரை 27 புதன்

தி.தூ.பணி 3:1-10 தி.பா.105:1-4,6-9 பு.லூக்.24:13-35

## பரி.நற்செய்தியிலிருந்து

அதே நாளில் சீடர்களில் இருவர் எருசலேமிலிருந்து ஏறத்தாழ பதினொரு கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஓர் ஊருக்கு சென்று கொண்டிருந்தனர். இவ்வூரின் பெயர் எம்மாவு. அவர்கள் இந்நிகழ்ச்சிகளைக் குறித்து ஒருவரோடு ஒருவர் உரையாடிக் கொண்டே சென்றார்கள். இப்படி அவர்கள் வினவிக் கொண்டும் உரையாடிக் கொண்டும் சென்ற போது, இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார். ஆனால் அவர் யார் என்று அறிந்து கொள்ளாதவாறு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டு இருந்தன. அவர் அவர்களை நோக்கி , வழி நெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருப்பது என்ன? என்று கேட்டார். அவர்கள் முக வாட்டத்தோடு நின்றார்கள்..... அவருக்கு மறுமொழியாக "எருசலேமில் தங்கியிருப்பவர்களில் உமக்கு மாத்திரம் தான் இந்நாட்களில் நிகழ்ந்தவை தெரியாதோ" என்றார். அதற்கு அவர் "என்ன நிகழ்ந்தது" என்று கேட்டார். அவர்கள் அவரிடம் நாசரேத்து இயேசுவைப் பற்றியே தான் பேசுகின்றோம். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாக வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார். அவர் இஸ்ராயேலை மீட்கப் போகின்றார் என்றிருந் தோம்........ அறிவிலிகளே இறைவாக்கினர்கள் சொன்ன எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! மெசியா தாம் மாட்சி அடைவதற்கு முன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா என்றார்.........

## ஒளியின் விழிப்புறுதல்

நம்முடைய பாவங்களுக்காக விதி என்கின்ற பரம்பரைச் சாபங்களை முறியடிப்பதற்காக சிலுவையில் ரித்த இயேசு கிறிஸ்துவானவர், உயிர்த்தெழுந்தார். அல்லேலூய்யா!!! ராஜாதி ராஜன் தேவாதி தேவன் உன்றும் எம்மத்தியில் உயிருடன் வெற்றி வேந்தனாக ராழ்கின்றார். அல்லேலூய்யா!! வல்ல இறைவாக்கினரை கொன்று விட்டார்கள் என்று கவலையுறுகின்றவர்கள், இறை வாக்கை விசுவசிக்க முடியாது இருந்த மந்த நிலைக்கு ஒளியூட்டி, தம்மால் வெளியாகிய இறை வாக்கை மீண்டும் தெளிவுபடுத்திக் கூறுகின்றார். மனுமகன் பாவிகள் கரங்களில் ஒப்புவிக்கப்பட்டு, சிலுவை~யில் அறையப்பட்டு மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழ வேண்டும் என்று கூறியதற்கு விழிப்புறச் செய்கின்றார். விழிப்புறுதலைப் பெற்ற அவர்கள் உள்ளங்களில் ஒளி பெருக 'எங்களோடு தங்கும்' எனும் அழைப்பை விடுக்கின்றனர். அவர்களோடு தங்கும் ஆண்டவர் பந்தியில் அமர்ந்து அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி பிட்டு சங்கமமாகின்ற போது, அவர்கள் கண்கள் திறக்கப்படுகின்றன. அவர்கள் அனைத்து மறை ரகசியமான திட்டங்களைப் புரிந்து கொள்ளும் ஒளியினைப் பெறுகின்றார்கள்.

## எம் பேரில்

*நாம் கடந்து வந்த பாஸ்காவை அனுபவித்த விதத்தினை மீளப்பார்போம். உணவை, உடலை ஒறுத்து நோன்பிருந்து மாமிசம் உண்ணாமல் வாழ்ந்தது எதற்காக? மற்றவர் என் ஒறுத்தலை அறிய வேண்டும் என்றா? அன்றேல் ஆண்டவரின் திருவிருப்பத்தினை நிறைவேற்றிட வல்லமை பெறுவதற்காகவா? அதற்காக நான் பெற்றுக் கொள்ளும் அவமானம், வேதனை,நோய், துன்பம் என்பவற்றை அன்போடு அரவணைத்து திருமகனின் பாடுகளோடு நான் சங்கமமாகினேனா?*

எம்மாவுஸ் பயணத்தில் சீடர்களோடு பயணம் சென்ற உயிர்த்த ஆண்டவர் எம்மோடு பயணம் செய்கின்றார். அனைத்து மரணத்திலும் 'அஞ்சாதே நான் உன்னோடு' என்று கூறி என்னை அன்பு செய்கின்ற உயிர்த்த ஆண்டவர் எமக்கு வெற்றி அளித்துள்ளார். வெற்றி வேந்தனாய் சாவை வென்று வாழ்வு தந்த தேவ மைந்தனை, நன்றி பொங்கவே நாளும் பாடி வாழ்த்து கூறிப் போற்றிப் புகழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 சித்திரை 28 வியாழன்**

**தி.தூ.பணி 3:11-26 தி.பா 8:1,4-8 பு.லூக். 24:35-48**

## பரி. நற்செய்தியிலிருந்து

அவர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும் போது அவரைக் கண்டுணர்ந்து கொண்டதையும் அங்கிருந்தவர்கள் எடுத்துரைத்தார்கள். சீடர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருந்த போது இயேசு அவர்கள் நடுவில் நின்று "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று அவர்கள் வாழ்த்தினார். அவர்கள் திகிலுற்று அச்சம் நிறைந்தவர்களாய் ஓர் ஆவியைக் காண்பதாய் நினைத்தார்கள் அதற்கு அவர் "நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள் . கைகளையும் கால்களையும் பாருங்கள் நானே என்னைத் தொட்டுப் பாருங்கள். இவை ஆவிக்குக் கிடையாதே " என்று கூறினார்.... பாவ மன்னிப்புப் பெற யெருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் பறைசாற்றப்பட வேண்டும் இவற்றிற்கு நீங்கள் சாட்சிகள்.

## ஒளியின் விழிப்புறுதல்

உயிர்த்த இயேசு தாம் விண்ணேற்றமடையும் நாள் வரையும் பல இடங்களில் தம் சீடர்களுக்குக் காட்சி கொடுத்து, 'உங்களுக்குச் சமாதானம்' என்று கூறித் தாம் விட்டுச் சென்ற தூதுச் சேவையைத் தொடர்ந்து செய்யுமாறு அவர்களுக்கு கூறுகின்றார். இயேசுவின் பணி மரணத்தோடு நின்று விடவில்லை. தாம் விண்ணேற்றமடையும் நாள் வரையும் அதைச் செய்து கொண்டே இருந்தார். உயிர்த்த ஆண்டவர் தாம் தேர்ந்து கொண்ட சீடர்கள் தம் அழைப்பை மறந்தவர்களாக அவர்கள் விட்டு வந்த தொழில்களில் மீண்டும் ஈடுபடுவதைக் காண்கின்றார். அவர்களைப் பலப்படுத்து வதற்காகப் பல உறுதி மொழிகள் அவர்களுக்குக் கூறுகின்றார். உயிர்த்த ஆண்டவர் அவர்களைச் சந்தித்து உரையாடும் போது அவர்களுக்குள் பேருவகை ஏற்படுவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

## எம் பேரில்

இன்று முதல் வெளிபாட்டில் தூய ஆவியைப் பெற்றுக் கொண்ட பின் சீடர்களினூடாக நடைபெறுகின்ற அரும் அடையாளங்களைக் கண்டு மக்கள் வியப்படைகின்றார்கள். சீடர்களும் அச்சமின்றி உயிர்த்த ஆண்டவரைப் பற்றி போதிக்கின்றார்கள். தூய ஆவியானவரால் நாம் இயக்கப்படவில்லையென்றால், எங்களால் நற் செய்தியைப் பறைசாற்ற முடியாது. எனவே நாம் எம்மைப் பற்றி ஒரு கணம் திரும்பிப் பார்ப்போம். நாம் தூய ஆவியினால் இயக்கப் படுகின்றோமா? அவருடைய இயக்குதலில் செயல்படுகின்றோமா? அல்லது எமது மனித முயற்சியினால் செயல்படுகின்றோமா தூய ஆவியானவர் எங்களை இயக்கவில்லை என்றால் வேறு ஏதோ ஒன்று எங்களை இயக்கத் தொடங்கும். எம்முடைய சுய பெலத்தினாலோ சுய முயற்சியினாலோ இறையரசைப் பற்றிய நற் செய்தியை எடுத்துரைக்க முடியாது. எனவே தூய ஆவியினால் எங்கணமும் நிரப்பப் பட்டவர்களாக செயல்படுவோமாக.

## செபத்திற்கு உள்ளாகுதல்

இறை இயேசுவே! உயிர்த்த உம்மை சந்தித்து, உம்முடன் ஒன்றித்து, வல்லமையோடு சாட்சி பகர எம்மை விழிப்புள்ளவர் களாக்கியருளும். உமது தூய ஆவியை அதிகமாக எமக்கு அருளியருளும். அப்போது, தூய ஆவியானவரால் ஆட்கொள்ளப் பட்ட நாம் அஞ்சா நெஞ்சத்தினராக செயல்படுவோம். எம்மைத் திடப்படுத்தியருளும்.

'ஆண்டவரே எங்கள் தலைவரே உமது பெயர் உலகெங்கும் எவ்வளவு மேன்மையாய் விளங்குகின்றது. உமது மாட்சி வானங்களுக்கு மேலாகவும் உணர்ந்துள்ளது.'

உமது கை படைத்தவற்றை மனிதர் ஆளும் படி செய்துள்ளீர். எல்லாவற்றையும் அவர்கள் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 சித்திரை 29 வெள்ளி | | |
|---|---|---|
| தி.தூ.பணி 4:1-12 | தி.பாடல் 118:1-2,4,22-27 | பு.யோவான் 21:1-14 |

## பரி. நற்செய்தியிலிருந்து

பின்னர் இயேசு தம் சீடருக்குத் திபேரியக் கடல் அருகே மீண்டும் தோன்றினார். .... அப்போது சீமோன் பேதுரு அவர்களிடம், 'நான் மீன்பிடிக்கப் போகிறேன்' என்றார். அவர்கள், 'நாங்களும் உம்மோடு வருகிறோம்' என்று போய்ப் படகில் ஏறினார்கள். அன்று இரவு அவர்களுக்கு மீன் ஒன்றும் கிடைக்கவில்லை. ஏற்கெனவே விடியற்காலை ஆகியிருந்தது. இயேசு கரையில் நின்றார். ஆனால் அவர் இயேசு என்று சீடர்கள் அறிந்து கொள்ளவில்லை. இயேசு அவர்களிடம், 'பிள்ளைகளே! மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?' என்று கேட்டார். அதற்கு அவர்கள், 'இல்லை' என்றார்கள். அவர், 'படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள்: மீன் கிடைக்கும்' என்று அவர்களிடம் கூறினார். அவர்களும் அவ்வாறே வீசினார்கள். மீன்கள் மிகுதியாய் அகப்பபட்டதால் அவர்களால் வலையை இழுக்க முடியவில்லை.......

## ஒளியில் விழிப்புறுதல

"பிள்ளைகளே மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?" கிறிஸ்துவின் அன்பு, இரக்கம், கருணை, பாசம் அனைத்துமே இவ்வசனத்தின் மூலம் விளங்குகின்றது. சிலுவை சுமந்து வீதியிலே சென்றபோது ஓடி ஒழிந்த சீடர்கள், பல நன்மைகள் பெற்றும் அதிசயங்களை கண்டும் ஆபத்திலே அந்தரிக்கவிட்ட சீடர்கள், அவர்களது தேவையை அறிந்து அவர்களை நாடி செல்லும் கிறிஸ்து பின் தொடரும் அன்பினை செய்து காட்டுகின்றார். தந்தையின் நிறைவான அன்பினால் முழுமையடையாவிட்டால் இவ்வாறு செயல்பட முடியாது. இன்று எம்மையும் உன்னத அன்பின் நான்கினை அனுபவிக்க அழைக்கின்றார். விழிப்புறுவோமா?

## எம் பேரில்

"கடலில் விழுந்த நண்பனுக்கு கை கொடுத்தேன் அவன் கரையேறி கரைக்கு வந்து விட்டான் கடலில் நான் தான் வீழ்ந்து விட்டேன்." என்ற அனுபவத்திலே இன்று நான் உள்ளேன் பிறர் நலனுக்காக நான் செய்த பல நல்ல காரியங்கள் அனைத்தினாலும் வேதனையே ஏற்பட்டது. இவ் வேதனை விளிம்பில் நின்ற நான்,இனி யாருக்கும் எந்த ஒரு நற்செயலும் செய்யக் கூடாது என்ற நிலைக்கு வந்தேன். ஆனால் இறைவன் முன் தோன்றி நின்ற போது நான் இருக்கும் நிலையை உணர்ந்தேன். மனித நிலையில் நான் ஒதுங்குவது சரியானது ஆனால் இறைவன் முன்னிலையில் ........ எனது எண்ணம் தவறானது என சுட்டிக்காட்டினார். எனது முடியாத நிலையையும் இறைவனுக்கு வெளிப்படுத்தினேன் எல்லோரையும் என்னால் அன்பு செய்ய முடியாவிட்டாலும் ஒரு சிலரையாவது அன்பு செய்யும் வல்லமையை தந்துள்ளார் தற்போது யார் மேலும் வெறுப்பில்லை 'இன்னார் செய்தாரை அவர் நான நன்னயம் செய்துவிடல்' திருவள்ளுவரின் எண்ணப்படி என்னால் நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்வதில்லை. இது எனது பொதுவான இயல்பு 'கோபம் கொண்டாலும் பாவம் செய்யாதே'என்ற பவுலின் கூற்று இன்றும் எனக்கு வழிகாட்டுகின்றது.

அகிலத்தின் அன்பு, பாதம் கழுவும் அன்பு, பலியாகும் அன்பு இம்மூன்றினை ஓரளவு செய்யகூடியதாக உள்ளது. ஆனால் பின் தொடரும் அன்பினை செய்ய கடினத்தன்மையை உணருகிறேன். இதற்காகவே இறைவன் என்னை அழைத்துள்ளதையும் என்னால் புரிந்து கொள்ளமுடிகின்றது. இம்முடியா நிலையிலே இறைவன் முன் தோன்றி நிற்கிறேன். 'என்னை பெலபடுத்துகின்ற கிறிஸ்துவால் என்னால் எதையும் செய்ய ஆற்றலுண்டு' என்ற பவுலின் விசுவாசத்தை உரிமையாக்கி கொள்கின்றேன். இவ்வல்லமைக்காக நானும் செபிக்கின்றேன். எனக்காக நீங்களும் செபிப்பீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2011 சித்திரை 30 சனி

| | | |
|---|---|---|
| தி.தூ.பணி 4:13-21 | தி.பா 118:1,14-16, 18-21 | பு.மாற்கு 16:9-15 |

## பரி. நற்செய்தி நிகழ்ச்சி

வாரத்தின் முதல்நாள் காலையில் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு அவர் முதலில் மகதலா மரியாவிற்கு தோன்றினார். அவர் உயிரோடு இருக்கிறார் என்றும் மரியா அவரைக் கண்டார் என்றும் கேட்ட போது அவர்கள் நம்பவில்லை... இறுதியாகப் பதினொருவரும் மத்தியில் அமர்ந்திருந்த பொழுது அவர்களுக்கு இயேசு தோன்றினார். உயிருடன் எழுப்பப்பட்ட தம்மைக் கண்டவர்கள் சொன்னதையும் நம்பாமல் அவர்கள் கடின உள்ளத்தோடு இருந்தமையால் அவர் அவர்களுடைய நம்பிக்கையின் மையைக் கண்டித்தார். இயேசு அவர்களை நோக்கி "உலகமெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."

## ஒளியின் விழிப்புறுதல்

மரணத்தை வென்று உயிர்த்த இயேசுவின் முதலாம் காட்சியை காண மகதலா மரியா பாக்கியம் நிறைந்தவளாக இருந்தாள். இயேசுவின் உத்தானம் இவளால் சீடருக்கு அறிவிக்கப் பட்டது. இதனை ஏற்றுக் கொள்ளும் சக்தி சீடரிடம் இருக்கவில்லை. மனித மட்டத்தில் நடக்க முடியாததால் அவர்கள் நம்பவில்லை. அன்று பதினொரு சீடர்களும் அமர்ந்து இருந்த போது இயேசு அவர்கள் முன் தோன்றி மரித்த இயேசு நான் உயிர்த்துள்ளேன் என்று நிரூபிக்கின்றார். தன் போதனைகளில் மூன்று முறை இதனை வெளிப்படுத்தியிருந்தாலும் சீடர்கள் இதனை ஏற்றுக் கொள்ள முடியாமற் போனதையிட்டு வருந்துகின்றார். அத்துடன் 'இயேசு மரணத்தை வென்று உயிர்த்துள்ளார்' என்னும் நற் செய்தியை உலகமெங்கும் பரப்பும் படியாக தம் சீடர்களுக்குக் கூறுகின்றார்.

## எம் பேரில்

இயேசு ஆரம்பித்த பணியை தொடர்ந்து தம் சீடர்கள் செய்ய வேண்டும் என்பது அவர் விருப்பமாக இருந்தது. ஆகவே அவர் தம் சீடரிடம் நற்செய்தியை உலகமெங்கும் பரப்பும் படி கூறினார்.

இன்று அவர் சீடராக அழைக்கப்பட்ட எம் ஒவ்வொருவரிடமும் இயேசு எதிர்பார்ப்பது இச் சேவையை அல்லவா? இன்று உயிர்த்த இயேசுவைச் சந்திக்க பல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. நம்பிக்கை நிறைந்த உள்ளத்தோடு இயேசுவை நாம் சந்தித்து உறவாடலாம் இறைவனின் வல்லமையை உணர்வோம். மற்றவருக்கு சான்று பகிர முன்வருவோம்.

எமது பெலயீனங்களில் சவால்களில் இயேசுவிலிருந்து பிரிந்து வாழ்ந்திருக்கலாம். ஆனாலும், அவரிடம் மனஸ்தாபத்துடன் திரும்பி வந்து முழுமையாக அவரில் விசுவாசத்துடன் வாழும் பொழுது எம் வாழ்வு வளம் பெறும். எனவே எமது மீட்பாளரான இயேசுவே என் ஆண்டவர் என வாயார அவரை வாழ்த்திப் போற்றுவோம். நற்செய்தியின் தூதனாக மாற தூய ஆவியின் வரம் வேண்டுவோம்.

## செபம்

உலக மக்களை பாவத்திலிருந்து மீட்க வேண்டும் என்ற ஒரே நோக்குக்காக தமது கடைசித் துளி இரத்தத்தையும் சிந்திய அன்பு இயேசுவே! எமக்கு வாழ்வு தரும் வார்த்தைகள் உம்மிடமே உள்ளன என்பதை எம் வாழ்நாள் முழுவதும் நினைவூட்டிக் கொள்ள வரம் தாரும் இறை அரசிற்காக நான் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்க தூய ஆவியின் வல்லமையால் என்னைத் திருப்பொழிவு செய்தருளும். ஆமென்.

## பாடுவோம்

வெற்றி வேந்தராய் சாவை வென்று ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “தூய ஆவியில் பயணம“ சஞ்சிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

பெயர் : ..........................................................................................................

சஞ்சிகையை அனுப்ப வேண்டிய விலாசம் : ........................................................

..........................................................................................................

.................ஆம் ஆண்டு...................... மாதம் தொடக்கம் ஆறு/பன்னிரெண்டு மாதங்களுக்காக ரூபா...............................ஐ........... இலக்கமுடைய காசுக்கட்டளையை /காசோலையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

திகதி :.................................  ............................................ கையொப்பம்

---

## “தூய ஆவியில் பயணம்” சஞ்சிகை

- தபால் கட்டணத்துடன் : ஆறு மாதங்கள் - ரூ. 110.00
  பன்னிரெண்டு மாதங்கள் - ரூ. 220.00
- காசுக்கட்டளைகள்/காசோலைகள் : “கிது தன புபுதுவ” என்ற பெயருக்கு மாத்திரம் அனுப்பவும்.
- பணம் செலுத்தும் அலுவலகம் : வல்பொல (மே. மா.)
- புபுதுவ நடுநிலையம் : ஸ்ரீ பிரசங்சாராமய, வல்பொல, ராகம.
  தொலைபேசி : 011-2230300 ப/க்ஸ் : 011-2231490
  மின்தபால் (E-mail) : pubuduwa@wow.lk
  Website : www.kithudanapubuduwa.net
  அச்சகம் : புபுது அச்சகம்,
  452, தேசிய பெசிலிக்கா மாவத்தை, தேவத்தை, ராகம.
  தொலைபேசி : 011-2958439
- பகிர்ந்தளித்தல் : “புபுதுவ” வெளியீடு - பரப்புதல் சேவை
  ஸ்ரீ பிரசங்சாராமய, வல்பொல, ராகம.
  தொலைபேசி : 011-2230300
- சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள் :
  - ஸ்ரீ ரம்யா ராமய, பாலக்குடா, தலவில கோயில்.
  - ஸ்ரீ கிறிஸ்து தர்மாராமய, தெதுரு ஓயா, மானுவன்கம, சிலாபம்.
  - புபுது நிவச, தம்பறாவில, வைக்கால்.
  - புபுது நிவச, தங்கொட்டுவ.
  - புபுது நிவச, 386, பிரதான வீதி, நீர்கொழும்பு.
  - கிறிஸ்து கேந்திரய, ஜா-எல.
  - 7வது மாடி, 6வது சின்னப்பர் நடுநிலையம், கொழும்பு-11.

tpiy &. 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்பட கதை

எமது அன்றாட வாழ்கை நிகழ்ச்சிகளில் பெரிதாகவோ, சிறியதாகவோ "மரணங்களின்" அனுபவத்திற்கு உள்ளாகும் போது இவற்றிலிருந்து தப்பி ஓட அல்லது கூடிய விரைவில் இவற்றிற்கு விடை தேடும் சோதனைகள் அதிகம் அவ்வாறே எமது விருப்பத்திற்கு, ஆசைகளுக்கு, உரிமைகளுக்கு 'மரணம்' ஏற்படும் போது கூட நாம் அம் 'மரணத்திற்கு' பயத்தினால் தப்பி ஓடவோ அல்லது அவற்றை நியாயப் படுத்த எவ்வளவோ முயற்சி செய்திருப்போம்?

ஆனாலும் இயேசுகிறிஸ்து நாதரின் சீடர்கள் என்றவகையில் அவருடைய பாடுகளுக்கும் மரணத்திற்கும் உயிர்ப்பிற்கும் (மகிமைக்கு) பங்கு கொள்வதற்கு நாம் பெற்றிருக்கும்

**வரப்பிரசாதத்தின் வல்லமைகள்**

**நாம் வீணாக விடாமல் இருப்போம்**

"நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட அருளை வீணாக்க வேண்டாம். என அவரோடு உழைக்கும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன். விடுதலை நாளில் உமக்கு துணையாய் இருந்தேன்" எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம் இன்றே மீட்பு நாள!
(2 கொரிந்தியர் 6:1-2)

வல்லமை நிறைந்த தவக்காலத்தை கடந்து போகுதலின் அனுபவத்தை பெற்றுக் கொள்வதற்கு 'பாஸ்கா' வாழ்த்துக்கள்

2011 சித்திரை மாத தூய ஆவியின் பயணம்

ISSN 1391 - 5975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org